# கலைச் செல்வி



1960

ஆனி

25

# மக்கள் வைத்தியசாலை

கே. கே. எஸ். வீதி, சுன்னாகம்.

ஸ்தாபிதம் 28-11-58

மக்கள் நன்மையையும், வசதியையும். சுகாதார வாழ்க்கையையும் நோக்கமாகக் கொண்ட சிறந்த வைத்தியசாலை இதுவே

தினந்தோறும் திறக்கப்படும் நேரம்
காலை 7-30 தொடக்கம் மாலை 9 மணி வரை

உயர்தர சிகிச்சை பெற உதவுமிடம்
மக்கள் வைத்தியசாலையே.

WE POSSESS ALL LATEST PATENT
MSDICINES FOR SALE

SERVICE AVAILABLE DAY AND NIGHT
OUR MOTTO IS SERVICE

# PEOPLE'S DISPENSARY

## CHUNNAKAM

(MANAGING PROPRIETOR : MR. K. S. KANDIAH)

போன்: 281 தந்தி: "ஜுவெல்லர்ஸ்"

மதிப்பிற் சிறந்த வைரங்கள்
அழகிற் சிறந்த ஆபரணங்கள்

யாவற்றிற்கும்

ஈழத்திருநாட்டில்
இணையற்ற ஸ்தாபனம்

# தங்க மாளிகை

யாழ்ப்பாணம்

நம்பிக்கை! நாணயம்! நயம்!
உத்தரவாதம்!

பெற்ற நகைகளை 32 வருடங்களாகச் செய்தளித்து
அமோக ஆதரவுபெற்ற
இலங்கை இந்தியாவின்
மிகப்பெரிய நகை வைர வியாபாரிகள்

# எல். கே. எஸ். ஜுவெல்லர்ஸ்

யாழ்ப்பாணம்

கிளைகள்: கொழும்பு, திருச்சி, சென்னை, காயல்பட்டணம்

# FANCY PALACE

## THE HAPPY PALACE

WITH

## HAPPY GIFTS

- றேயல் தலைமுடிகள்
- றேயல் சுவர்க்கடிகாரங்கள்
- ஷெவ்வேர்ஸ் பவுண்டன் பேனாக்கள்

ஆகியவற்றிற்கு

## யாழ்ப்பாணத்தில்

### ஏக விநியோகஸ்தர்கள்

கண்ணைக் கவர்ந்து மனதை மயக்கும்

பலவிதமான

## பரிசுப் பொருட்களை

### விசேட தினங்களில்

உங்கள் உற்றார் உறவினருக்கும், நண்பர்களுக்கும்,

பேனா நண்பர்களுக்கும்

### வாங்கிக் கொடுங்கள்

தந்தி : Fancyware　　　போன் : 239

# பான்ஸி பலஸ்,

27, மெயின் வீதி : : யாழ்ப்பாணம்

ஏ.
கே.
எஸ்.
அன்
ச
ன்
ஸ்

போன்.

**519**

*

உங்கள்
அபிமானத்திற்கும்
அன்பிற்கும்
உரிய

நகை
வைர வியாபாரிகள்

# நகை மாளிகை

63, 65, கன்னுதிட்டி
யாழ்ப்பாணம்

# வாசகர் வாய்மொழி

**கோலத்தின் காலம்.**

கலைச்செல்வி கிடைத்தது. காலம் கெட்டு வந்தாலும், கோலம் கெட்டு விடவில்லை. நன்றாக இருக்கிறது. இதே வேகத்தில் வளர்ந்தால்.....?

கொழும்பு சிவலிங்கம்

**அள்ளினுள், தொட்டாள்.**

'வஞ்சம்' நெஞ்சை அள்ளிவிட்டது. உதயணனின் 'விமோசனம்' இதயத்தையே தொட்டுவிட்டது. சித்திரம் ஒன்றும் கண்டேன். 'கலைச்செல்வி' பற்றி சந்தேகத்திற்கே இடமில்லை.

வட்டுக்கோட்டை. 'வட்டூர்கானம்'

**நகையும் விலையும்.**

ஹாஸ்யக் கட்டுரைகள் எழுதுபவர்களை ஆதரிப்பதற்காகத் தாங்கள் நடாத்தவிருக்கும் கட்டுரைப் போட்டியை வரவேற்கிறோம். இதன் மூலம் நம் நாட்டில் நகைச்சுவை எழுத்துக்கு மதிப்பிருக்குமென்று நம்புகிறோம்.

மட்டக்களப்பு. பாக்கியநாயகம்

**உணர்ச்சி! வேகம்!**

தொடர்கதை மிக மிக விறுவிறுப்புடன் செல்கின்றது. ஆசிரியர் பாத்திரங்களின் உணர்ச்சியை வெளிப்படுத்தும் விதம் அதியற்புதம்.

திருநெல்வேலி க. இராஜி

**கூட்டுங்கள், கேட்கப்படும்.**

'கலைச்செல்வி' "பட் பட்" பகுதியில் தாண்டவக்கோன் அளிக்கும் பதில்களை நான் வரவேற்கின்றேன். கேள்வி பதில் பங்கங்களைக் கூட்டுங்கள்.

**ஐயோ இவள் வடிவென்பதோர்...,**

சென்ற மாதக் 'கலைச்செல்வியின் அட்டைப்படம், அற்புதம்' அபாரம், அருமை' அசல், அ....

பொலநறுவை. புண்ணியமூர்த்தி

**பட்டம் விட்டாரையா**

நடிகர் திலகத்தைப் பாராட்டி எழுதும் போது அவருடைய பெயருக்கு முன்னால் வழங்கும் எல்லாப் பட்டங்களையும் குறிப்பிட்டீர்கள். ஆனால், கொழும்பில் சமீபத்தில் அவருக்களிக்கப்பட்ட 'கலைக்குரிசில்,' என்ற பட்டத்தை மறந்துவிட்டீர்களே...

கொழும்பு சிவாஜிநேசன்

**ஆனந்தக்கோன் ஆர்**

ஆனந்தக்கோனுர் என்ற அம்சம் நன்றாகத் தானிருக்கின்றது. அதை எழுதும் 'கொழும்பு—சிவம்' யார்?

பருத்தித்துறை சி. தேவராசன்

**கனக்க, செந்தி நாதன்.**

சென்ற இதழில் வெளியான 'எழுத்துலகில் நான்,' என்ற கட்டுரையை வாசித்து ஆச்சரியமடைந்தேன். இத்தனை கதைகளையும், கட்டுரைகளையும், விமர்சனங்களையும் ஒரு தமிழாசிரியர் எழுதினரா?

கண்டி இ. ரா, பெரியசாமி

**ஞானத்தின் பெருவுரு**

'ஞானத்தின் திருவுரு,' என்ற கட்டுரையைப் படித்தோம்; சுவைத்தோம்; பாடமாக்கினோம். மாணவர் ஒருவர் அக்கட்டுரையை எழுதினர் என்பதறிந்து மாணவர்களாகிய நாம் பெருமகிழ்வடைகின்றோம்.

கொட்டாஞ்சேனை. சி. அருள்

# கலைச்செல்வி

கலை: 2 | சார்வரி ஆனி | காட்சி :5

## பொருளடக்கம்

**தொடர்கதை:**
உனக்காக, கண்ணே!

**சிறுகதை:**
மேடும் பள்ளமும்.
தற்கொலை.

**கவிதை:**
கனகி புராணம்.
கொஞ்சம் பொறு.

**பேட்டி:**
நாவலாசிரியர் அகிலன்

**கட்டுரை**
தமிழ் இலக்கியத்தில்
கம்பராமாயணம்
அண்ணமலை நகரில்

**பிற:**
மலையுருகும் மச்சி...
வாசகர் போட்டி
அறிவு வளர்ச்சிப் போட்டி
வளருந்தமிழ்
இசை விழா

* * *

அட்டைப்படம்

# வணக்கம்.

சென்ற இதழில் நாம் உறுதியளித்தபடி இம்மாதம் முதலாம் திகதியே 'கலைச்செல்வி' வெளிவருகிருள். இனிமேல், ஒவ்வொரு ஆங்கிலமாதம் முதலாம் திகதியும் உங்களைச் சந்திக்கஅவள் தவறமாட்டாள்.

நமது தலைநகராகிய கொழும்பில் **தினகரன் தமிழ் விழா** சென்ற மாதம் மிகவும் கோலாகலமாக நடைபெற்றது. இலங்கை அறிஞர்களுடன், இந்தியாவிலிருந்து பன்மொழிப் புலவர் **தெ. பொ. மீ.** அவர்களும், பிரபல நாவலாசிரியர் **அகிலன்** அவர்களும் கலந்துகொண்டார்கள். தமிழ்நாட்டின் பிரபல நடிகர் **சிவாஜி கணேசன்** அவர்கட்கு **'கலைக்குரிசில்'** என்ற பட்டம் விழாவில் வழங்கப்பட்டது. இயல், இசை, நாடகம் ஆகிய மூன்று பிரிவாக நிகழ்ச்சிகள் நடைபெற்றன. இலங்கையில் இதுவரை எந்த விழாவுமே இவ்வளவு சிறப்பாக நடைபெறவில்லை என்று சொல்லுமளவிற்கு விழாவை நடாத்திய அனைவரையும் பாராட்டுகின்றோம்.

ஈழத் தமிழகத்தின் தலைநகரமாகக் கொள்ளக்கூடிய யாழ்ப்பாணத்தில் இசைவிழா ஒன்றினை வித்வ சபையார் சிறப்பாக நடாத்தினர். ஏழு நாட்களாக இசை வெள்ளம் பெருக்கெடுத்தோடியது. இசைப்புலவர் **சண்முகரத்னம்** அவர்கட்கு **'கானவாரிதி'** என்றபட்டமும்வழங்கப்பட்டது.

**எல்லாத்துறையிலும் தமிழன் முன்னேறும்போது அரசியல் நிலைதான் ஒருமாதிரியாக இருக்கின்றது. என்ருலும் நம்பிக்கையு**

தொடர் கதை:—

# உனக்காக கண்ணே!

— சிற்பி —

**நடந்த கதை:**

மட்டக்களப்பு பாரதி கல்லூரியின் ஆசிரியர் சண்முகம் பீ, ஏ. சாவித்திரி என்ற சக ஆசிரியையுடன் நெருங்கிப் பழகுகின்றான். அவர்கள் தொடர்பில் யாரோ களங்கம் கற்பித்து விடுகின்றார்கள் என்ற செய்தியை ஆசிரியர் பத்மநாதன் மூலம் அறிந்ததும், பயந்து கல்லூரியை விட்டுப் புறப்பட்டுக் கொழும்பை அடைகின்றான். பரமேஸ்வரன்—ரூபமதி ஆகியோரின் தொடர்பு அவனைப் புதிய மனிதனாக்குகின்றது. மட்டக்களப்பிற்குத் திரும்பிச் சென்று சாவித்திரியுடன் மனம்விட்டுப் பேசுகின்றான். ஊரில் தந்தை இறந்ததால் ஏற்பட்ட கடன் பிரச்சினையையும் கல்யாணப் பிரச்சினையையும், தன் சொந்த வீட்டை விற்பதன் மூலம் தீர்க்கின்றான். அவனுடைய கவலை தீர்க்கும் மருந்தாகிய சாவித்திரியுடன் மனம் கலந்து பேசிக்கொண்டிருந்தபோது, யாரோ வெளிக்கதவில் தட்டிவிட்டு, இருளில் மறைகின்றனர். அடுத்த நாள், சாவித்திரி மாசுடையவள் என்ற செய்தியைத் தாங்கிய அநாமதேயக் கடிதம் ஒன்று சண்முகத்திற்குக் கிடைக்கின்றது. அந்தச் செய்தியை ருசுப் படுத்தும் வகையில் சாவித்திரி பேசியது, சண்முகத்தின் ஆத்திரத்தைத் தூண்டுகிறது. அவளை ஏசிவிட்டு, அங்கிருந்தே ஓடுகின்றான். இனி, மேலே படியுங்கள்.

## 11. கதையாகிப் போனதடா.

என்ன செய்வது? எங்கே செல்வது? என்ற கேள்விக்கு விடை கண்டுபிடிக்க முன்னரே கொழும்பு ரயிலில் ஏறிவிட்டான் சண்முகம். ஆழ்ந்து சிந்தித்து ஆறுதலாக ஒரு முடிவிற்கு வரும் சக்தி அவனிடமிருந்து விடை பெற்றுவிட்டது. அவனுக்குச் சோறளித்துவாழ்வளித்த அந்தக் கல்லூரியைப் பற்றியோ, அன்பைக்கொடுத்து அறிவைப்பெற்ற தன் மாணவ சிகாமணிகளைப் பற்றியோ அமைதியையும் ஆனந்தத்தையும் கொடுத்த மட்டக்களப்புச் சூழ்நிலையைப்பற்றியோ அவனால் எண்ணிப் பார்க்கவே முடியவில்லை. பல்வேறு உணர்ச்சிகள் பொங்கும் உலைக்களமாக விளங்கியது அவன் உள்ளம்.

நேற்றுவரை அவனுக்குக் காதலே வாழ்வாக இருந்தது. இன்பத்திற்கோர் இலக்கணமாகவும் இலட்சியத்திற்கோர் இலக்கியமாகவும் தன்னையே பாவனை பண்ணி வாழ அவனால் முடிந்தது. ஆனால் இன்று...? இன்றல்ல இனி எப்பொழுதுமே அவன் வாழ்க்

காதல் அவனுக்கு ஏமாற்றத்தைக் கொடுத்தது; விரக்தியைக் கொடுத்தது; அதிர்ச்சியைக்கொடுத்தது. அவனைப் பொறுத்தவரை காதலும் கானலும் ஒரே பொருளுடைய இரண்டு சொற்களாகத் தோன்றின. காதல் பாதை அழைத்துச் சென்ற கவலைக் கிடங்கிற்குள் அவனுடன் கைகோர்த்துக்கொண்டு செல்வதற்கு எவருமில்லை. அந்தக் கஷ்டத்திலும், அவனுக்குக் கை கொடுத்து உதவியது அவனுடைய கண்கள்தான் —இதயக் குமுறலை, ஏமாற்றக் கதறலை, இலட்சியச் சிதறலை, கசிந்து கரைந்து கண்ணீராகக் கரைபுரண்டோடச் செய்தன.

சண்முகம் அழுதான். தொல்லையை மறைப்பதற்காக எல்லையை மறந்து அழுதான். ஆதியும் அந்தமுமில்லாத ஆண்டவனைப்போல் முதலும் முடிவும் தெரியாதபடி அழுது கொண்டேயிருந்தான்.

நேரம் விரைந்தது. தூரம் கரைந்தது. இதயம் களைத்தது. இரவு மறைந்

## கண்களை நம்பாதே!

நாம் பாவிக்கும் ரூபா நோட்டுக்களில் சில தொடர்பு இலக்கங்கள் இருக்கின்றன அல்லவா? அந்த இலக்கங்களை (தொடர்புக் குறிப்பை அல்ல) 25சதக் குத்தியினால் மறைக்க முடியுமா? கண்ணால் பார்க்கும்போது மறைக்க முடியாது போல் தோன்றும். ஆனால் உண்மையில் ..? 25சதக் குத்தியில் அந்த இலக்கங்கள் அனைத்தையும் மறைக்கலாம் நம்பாவிட்டால்' செய்து பாருங்கள்!

என்ன செய்வது? எங்கே செல்வது? — முன்பு அவ்வளவாகத் தேவைப்படாத இவற்றின் விடை இப்பொழுது உடனடித் தேவையாக மாறிவிட்டது. ஆமாம், என்ன செய்வது? எங்கே செல்வது?

பரமேஸ்வரனிடம் சென்றால் பரம சந்தோஷத்துடன் வரவேற்பான். பரிகாசத்தினாலும், பகடியினாலும் அவனுடைய கஷ்டங்களை; துயர நினைவுகளைப் பறக்கடித்து விடுவான். நினைவின் தொல்லையிலிருந்து நீங்கி நீண்ட நிம்மதியுடன் வாழலாம்.

'ஆனால்...? அவனை எந்த முகத்துடன் பார்ப்பது? நெஞ்சில் நிறைந்தவள் நஞ்சைக் கலந்துவிட்டாள் என்ற செய்தியை எப்படித் தெரிவிப்பது? தன்மானமற்ற 'தாசி' ஒருத்தியிடம் தணியாத காதலைச் செலுத்தி இன்று தவித்துத் தடுமாறும் தகவலை எவ்வாறு சொல்வது?

மாட்டேன்; அவனிடம் போகமாட்டேன்.

'என் முகம் என்னைக் காட்டிக் கொடுத்துவிடும். நான் கொழும்பிற்கு வந்த காரணத்தைக் கேட்பான். சாவித்திரியைப் பற்றிக் கேட்பான். ஒளிவு மறைவு இன்றி எல்லாவற்றையுமே அவனிடம் சொல்லமுடியுமா? குளிக்கப் போய்ச் சேற்றைப் பூசிய கதையை என்னால் குழறாமல் சொல்லமுடியுமா?

முடியாது; அவனிடம் போகவே முடியாது.

அருமை நண்பன் பரமேஸ்வரனும் அவனுடைய அன்புக் காதலி ரூபாவும் வாழும் இன்ப வாழ்க்கையைப் பார்த்துக்கொண்டு என்னால் சும்மா இருக்கமுடியுமா? அந்தப் பொன்னான உருவங்களை, புனிதமான காதலர்களை, என் பொறாமைத் தீயினால் பொசுக்கிவிட வேண்டுமா?

வேண்டாம்; அவனிடம் போக வேண்டாம்.

குழம்பிய மனத்துடன் 'பிளாட்பாரத்'திலேயே நின்றான் சண்முகம். தன்னைச் சற்றி ஒருதடவை பார்த்துக் கொண்டான். அவன் கொழும்பிற்கு வந்த ஒரு நிமிஷத்திற்குள் எத்தனையோபேர் அவனைத் தாண்டிச் சென்றுவிட்டார்கள். ஆனால் யாரும் அவனைக் கவனித்ததாகத் தெரியவில்லை. மூன்று நான்கு புகைவண்டிகள் வந்துபோய்விட்டன. பிரயாணிகள் வந்து கொண்டும் போய்க் கொண்டுமிருந்தனர். எவரும் அவனில் அக்கறை எடுத்ததாகத் தெரியவில்லை. சற்றுத் தூரத்தே அங்கும் இங்கும் ஓடும் 'டிராம்' வண்டிகளின் 'கடமுடா'ச் சத்தமும், ட்ராலி பஸ்சுகளின் 'ஸ் ஸ்' என்ற இரைச்சலும் லொறிகள், கார்களின் பேரிரைச்சலும், அவன் காதுகளைத் துளைத்தன. அவை எதற்குமே சண்முகம் என்றொரு சீவன் அங்கிருப்பது தெரியாது!

சண்முகம் தனக்குள் சொல்லிக் கொண்டான். "இது மட்டக்களப்பல்ல, கொழும்பு கோட்டை!"

மட்டக்களப்பென்றால் சண்முகத்திற்கு ராஜாங்க வரவேற்புக் கிடைத்திருக்கும். ஸ்டேசன் மாஸ்டர் முதல் போட்டர்வரை, சண்முகத்தை நன்கு தெரிந்து வைத்துள்ளவர்கள்; சண்முகத்தின் நண்பர்கள்; அவனுடைய பணிவிற்காகவும், பண்பிற்காகவும், அன்போடு கூறும் அறிவுரைகட்காகவும் அவனிடம் மிகுந்த மதிப்பு வைத்திருப்பவர்கள். ஆனால், கொழும்பில் அவன் வெறும் சண்முகம் தான். அவனைப்பற்றி விசாரிக்கவோ, அவனை வரவேற்கவோ அந்த ஸ்டேசனில் எவருமேகிடையாது.

இந்த நிதர்சன உண்மை அவனுக்குப் புரிந்ததும் அவன் நிம்மதியுடன் ஒரு பெருமூச்சு விட்டான். என்ன செய்வது? எங்கே செல்வது? என்பதற்கு விடை கிடைத்துவிடடது.

கொழும்பில் அவன் எதையும் செய்யலாம்; எந்தப் பகுதியிலாயினும் வாழலாம்; எவரும் அவனைக் கவனிக்கமாட்டார்கள்; அவனுக்காகக் கவலைப்படமாட்டார்கள்; கரைச்சலும் கொடுக்கமாட்டார்கள். முன்பெல்லாம் கிராமங்களில் மற்றைய மனிதர்களுடன் வாழப் பயந்தால், மனித சஞ்சாரமற்ற காட்டிற்கு ஓடி ஒளிந்துகொள்வார்கள். ஆனால் இப்பொழுது, நாட்டிலிருந்து காட்டிற்கு ஓடுவதற்குப் பதிலாக, நகரத்திற்கே ஓடிவருகின்றார்கள். விஞ்ஞானம் கற்றுக் கொடுத்த 'விரைவு' உணர்ச்சி நகர மக்களிடையே விரைவாகப் பரவி விட்டது. எதற்கெடுத்தாலும் அவசரம், அவசரம், அவசரம் தான். ஆற அமர யோசித்து எதையும் செய்யமுடிவதில்லை. எதையோ பிடித்துவிடவேண்டுமென்ற வேகத்தில் கண்ணை மூடிக்கொண்டு செல்கின்றார்களே தவிர, சூழவுள்ள மற்றைய மனிதனை ஏறெடுத்தும் பார்ப்பதில்லை. அடுத்த வீட்டுக்காரரையே தெரியாது வாழ்பவர்கள்தான் நகரங்களில் அதிகம். இலட்சம் மக்களுக்கு மத்தியில், "தனிமை"யில் வாழக்கூடிய விசித்திர வாய்ப்பு நகரில் உண்டு.

கொழும்பில் எங்கேயாவது ஒரு அறை எடுத்துக்கொண்டு வாழ்வதற்கு முடிவு செய்துவிட்டான். தன் பெட்டியைத் திறந்து பார்த்தான். மனம் பேதலித்த, பைத்தியக்கார நிலையில் முதனாள் எதையெதையோ பெட்டிக்குள் எடுத்து அடைந்த போது, அவனுடைய பணமும் அதற்குள் அகப்பட்டுவிட்டது. இனி, கொஞ்ச நாட்களுக்குப் பணத்தைப் பற்றிக் கவலைப்படாமல், கொழும்பில் வாழ்ந்துவிடலாம்.

ஒரு சிறிய ஹோட்டலில் தன் பெட்டியை வைத்துவிட்டு, அன்றைய பகல் முழுவதும் அறை தேடுவதில் ஈடுபட்டான். தமிழர்கள் அதிகமாக வாழும் கொட்டாஞ்சேனை, வெள்ளவத்தை, பம்பலப்பிட்டி முதலிய இடங்களில் வசதியான தனி அறைகள் பல இருந்தன. ஆனால் அவற்றைச் சண்முகம் அதிகம் விரும்பவில்லை. அங்கிருந்தால், ஒரு நாளைக்கில்லாவிட்டாலும் இன்னொரு நாள் பரமேஸ்வரன் அவனைக் கண்டுபிடித்தே விடுவான். அதற்குப்பிறகு வேறு வினையே தேவையில்லை.

கடைசியில் பொரளையில் ஒரு சிறிய அறை கிடைத்தது. சுற்றிலும் சிங்களக் குடும்பங்கள்; சிங்களச் சூழ்நிலை. மனிதர்களுக்கு மத்தியிலே வாழ்ந்தான். அதேசமயம் மனித சஞ்சாரமேயற்ற ஒரு சூனிய வெளியில் தனியொருவனாகவே வாழ்ந்தான்.

யந்திர கதியில் கழிந்த அன்றைய பொழுது மறைய, இரவு தன் இரும்புச் சிறகுகளை விரித்துக் கொண்டு வந்தது. செயற்கையாக, வலிந்து அவன் கட்டியெழுப்பிய நிம்மதிச் சுவர் இடிந்து விழுந்து தரைமட்டமாகியது. நகரத்தின் 'சந்தை இரைச்சலால்' அமுங்கி

அடங்கிக் கிடந்த அவனுடைய மன உளைச்சல் இப்போது அவன் காதுகளைக் குடைந்தெடுக்கத் தொடங்கியது. இதயம் கனத்தது. இமைகள் பனித்தன.

'சாவித்திரி!' — அவன் விம்மினன்; வெதும்பினன்; வெந்து துடிக்கும் புழுவைப்போல், விழுந்து புரண்டு அழுதான்.

உலகிலே காதலிக்கும் சந்தர்ப்பம் அநேகமாக எல்லோருக்கும் ஏற்படலாம். ஆனல் உள்ளன்புடன் காதலிக்கப்படும் பாக்கியம் ஆயிரத்தில் ஒருவருக்குத்தான் கிட்டும். அந்த ஆயிரத்தில் ஒருவனக, உடல் வனப்பும், உள்ளப் பண்பும் நிறைந்த ஓர் உத்தமியால் உள்ளன்புடன் காதலிக்கப்படும் பாக்கியசாலியாகத் தன்னைக் கருதியிருந்தான்.

ஆனல் ......!

பாக்கியசாலியாக இருந்தவன் இப்பொழுது பரிதாபத்திற்குரியவனகிவிட்டான். இதயக் கோவிலில் இருத்தி என்றென்றும் பூஜிக்கப் பட்டு வந்தவள் என்றே யாருக்கோ அடிமையானவள், எச்சில்பட்ட கனி, என்ற உண்மை அவனுக்குக் கசந்தது. என்றாலும் உண்மை உண்மை தானே. அவளே அதை ஒப்புக் கொண்டபின், சந்தேகத்திற்கு இடமேயில்லை. யாரை உத்தமி என்று நினைத்தானே அவள் உதைத்து ஒதுக்கப்படவேண்டியவள் என்ற எண்ணத்தை அவனல் சகிக்க முடியவில்லை.

'சாவித்திரி! அப்பா இறந்தார் அநியாயமாக. மாருத் துயரத்துடன் மறக்கமுடியாத கவலையுடன் இந்த மண்ணுலகை விட்டே மறைந்தார், என்றாலும் நான் வாழ்ந்தேன், உனக்காக. பெற்றதாயின் பரிதாபவேண்டுகோளையும் புறக்கணித்து, பிறந்த வீட்டையும் விற்றேன். என்றாலும் நான் வாழ்ந்தேன், உனக்காக. கோடி கோடியாகக் கொட்டிக் குவித்து, தன் செல்வக்குமாரியையும் எனக்குக் கட்டிக்கொடுக்க முன்வந்தார் பார்வதியின் அப்பா. அவரை வெறுத்து ஒதுக்கி விரட்டியது மல்லாமல், விஷம்போன்ற அவர்களின் பகைமையையும் விரும்பிச் சம்பாதித்தேன். என்றாலும் நான் வாழ்ந்தேன், உனக்காக ... ஆனல்... ஆனல்...'

ஒருகாலத்தில் உலகத்தின் துயரமெல்லாம் ஒன்று திரண்டு வந்தபோதும், சாவித்திரியின் நினைவு அவனுக்குச் சாந்தியளித்தது. இன்று சாவித்திரியின் நினைவே அவனுக்குச் சஞ்சலத்தையும் சங்கடத்தையும் கொடுத்தபோது அவனுக்குச் சாந்தி எங்கே கிட்டப்போகின்றது?

பழைய கதைகளைச் சொல்லி அழுதான், சோகம் மாறவில்லை. அது மாறவே மாருதா?

அவனுக்குக் கைவந்த எழுத்து இப்போது கைகொடுக்க முன்வந்தது. இரவின் தனிமையில் இருளின் கருமையில், தன் இதயத்தைத் திறந்து, அணு அணுவாகப் பிளந்து எழுத ஆரம்பித்தான்.

சண்முகம் அழுதான்; எழுதினன்; அழுது அழுது எழுதினன்; எழுதி எழுதி அழுதான்.

'சாவித்திரி! நீ எனக்குக் கனவு கொடுத்தாய்; கற்பனை கொடுத்தாய்; கதை கொடுத்தாய். கனவின் கனவாக, கற்பனையின் கற்பனையாக, கதையின் கதையாக நீ இருந்தாய். ஆனல் கலைந்த கனவாக, கருவற்ற கற்பனையாக, கருத்தற்ற கதையாக இப்போது கரைந்து விட்டாயே!' என்று ஆரம்பித்து சாவித்திரிக்கும் தனக்குமிடையே இருந்த தொடர்பை விரிவாக விளக்கமாக, தெளிவாக எழுதினன்.

அவன் எழுதியவை கனவுமல்ல,

கற்பனையுமல்ல. எல்லாம் நிஜம். நினைவு ஏட்டைப் புரட்டிப் பார்த்து நீண்டநேரம் எழுதினான். கையும் ஓயவில்லை; கண்களும் ஓயவில்லை. ஏதோ ஒரு வெறி — அது இலட்சிய வெறியோ, இலக்கிய வெறியோ, எழுத்து வெறியோ தெரியாது—அவனுள் புகுந்துகொண்டது.

வார்த்தைகள் குதித்துக் கும்மாளமிட்டுக்கொண்டுவர, தன் வாழ்வின் வாழ்வை, வகையற்ற வளமற்ற, வசையுற்ற வாழ்வை எழுதிக்கொண்டிருந்தான்.

உண்மை விளம்பியின் கடிதத்தையும் அதற்குப்பிறகு நடைபெற்ற சம்பவங்களையும் எழுத வேண்டிய கட்டம் வந்ததும் கைகள் சட்டென்று ஓய்ந்தன. பேனா தவறிக் கீழே விழுந்தது. நினைவு ஏடு அதற்கு அப்பால் புரள மறுத்தது. நெஞ்சின் மென்மையான பகுதியில் கூரிய முள்ளொன்று குத்திவிட்டதைப் போன்ற உணர்ச்சி ஏற்பட்டது. இதய வேதனை தாங்காது மார்பை அழுத்திப் பிடித்துக் கொண்டு மேசைமீது சாய்ந்தான். அழுது சலித்த கண்கள், எழுதிக் களைத்த கை, சிந்தித்துச் சூம்பிய உள்ளம், சோர்ந்து தளர்ந்த நரம்புகள், நலிந்து மெலிந்த உடல் — எல்லாம் நித்திரையின் அடிமைகளாயின.

அடுத்தநாள் அவன் விழித்தபோது மத்தியானம் பன்னிரண்டு மணி. ஒன்பது மணித்தியாலங்கட்கு மேலாக, தன்னை மறந்து, கொழும்பு நகரத்தின் காதைத் துளைக்கும் இரைச்சலை மறந்து, இந்த உலகையே மறந்து அவன் பேய்த்தூக்கம் தூங்கிவிட்டான்!

முதனாளிரவு மூன்றுமணி வரைக்கும் தான் ஆடிய வெறியாட்டத்தின் நினைவு வந்தது. அவன் வெட்கப்படவுமில்லை; துக்கப்படவுமில்லை. அந்த நினைவு அவனுக்கு நிம்மதியைத்தான் கொடுத்தது. இதயத்தின் வேதனையில் பெரும்பகுதியைப் பத்திரமாக இறக்கி வைத்துவிட்டான். நெஞ்சின் பாரம் ஓரளவு குறைந்தது.

பசி தன் சக்தியைக்காட்ட ஆரம்பித்தது. அருகேயிருந்த ஹோட்டல் ஒன்றிற்குச் சென்று சாப்பிட்டான். நினைவை எங்கேயோ நிறுத்திவிட்டு, வயிற்றை நிரப்பிக்கொண்டான்.

மீண்டும் அறைக்கு வந்ததும், தான் எழுதியவற்றையெல்லாம் ஆறுதலாகப் படித்துப் பார்த்தான். அது அவன் வாழ்க்கை வரலாறாகமட்டும் தோன்றவில்லை; அருமையான ஒரு சிறுகதையாகவும் அமைந்திருந்தது. வார்த்தைக்கு வார்த்தை சோகம் சொட்டியது. இன்பமும் துன்பமும் இணைந்து கலந்து கரைபுரண்டு ஓடின.

அதே கதையை மற்றவர்கள் ஏன் படிக்கக்கூடாது? மற்றவர்கள் வேண்டாம், சாவித்திரியாவது ஏன் படிக்கக்கூடாது?'

அவள் படிக்கத்தான் வேண்டும். அவளின் நினைவால், ஊனையும் உறக்கத்தையும் உலகையும் மறந்த ஓர் உன்மத்தனின் கதையை அவள் படிக்கவேண்டும். பொன்னென்று அவன் போற்றியது பித்தளையாக மாறிவிட்ட பெருந்துயரை — சித்தம் கலங்கி அவன் பித்தனாக மாறிவிட்ட பரிதாபக் கதையை அவள் படிக்க வேண்டும். அவளுக்கு இதயம் என்பது இருக்குமானால், அந்த இதயம் பீறிட்டு இரத்தம் பெருகவேண்டும்!

கதையைக் கடிதமாக அனுப்ப அவன் விரும்பவில்லை. நேரடியாக அனுப்ப அவன் நெஞ்சு இடங் கொடுக்கவில்லை.

அப்படியானால் ... ...?

'சட்'டென்று ஒருயோசனைஉதித்தது. 'கதையைக் கதையாகவே கருதி, ஒரு பத்திரிகைக்கு அனுப்பினாலென்ன?'

இரண்டு மூன்று கதைகள் மட்

வரதர் வெளியீடு.

# G. C. E. இந்துசமய பாடம்

## சைவ சமய பாடத் திரட்டு
## (SIVAISM)

புதிய பாடத்திட்டத்தின்படி தொகுக்கப் பெற்றது. வெளிவந்த சில மாதங்களிலேயே அடுத்த பதிப்பு வெளியிட நேர்ந்தமை ஒன்றே இந்நூலின் சிறப்பை எடுத்துக் காட்டும்.

முழுப் பகுதியும், அவற்றுக்கு பதவுரை, விசேட குறிப்புகள், பயிற்சி வினுக்கள், விடைகள், அட்டவணைகள் ஆகியவைகளும் அடங்கியது.

**தொகுப்பாசிரியர்கள்:**

வித்துவான் பொன் முத்துக்குமாரன் பி. ஓ. எல்.
பண்டிதர் ச. பஞ்சாட்சர சர்மா

**விலை ரூபா: 3-25** (பார்சல் செலவு வேறு)

விற்பனையாளருக்குத் தகுந்த கழிவு உண்டு.

# ஆனந்தா அச்சகம்-புத்தகசாலை

226, காங்கேசன் துறைவீதி :: யாழ்ப்பாணம்.

தந்தி: 'அச்சகம்'. போன்: 348

டுமே இதுவரை எழுதியிருந்தாலும், எழுத்துலகில் அவன் ஓர் தனியிடத்தைப்பெற்றிருந்தான. அவன் எழுதிய முதற் கதையைப் பாராட்டி முன்னூற்றுக்கு மேற்பட்ட வாசகர்கள் எழுதியிருந்தனர். அவனுடைய கதைகளை மகிழ்ச்சியுடன் வரவேற்றுப் பிரசுரிக்க எத்தனையோ இலக்கிய ஏடுகள் தயாராக இருந்தன.

கதையின் போக்கிற்கேற்ப, ஒரு முடிவை எழுதிக் கதையைப் பூர்த்தி செய்துவிட்டு, தனக்குப் பிடித்த ஒரு பத்திரிகைக்கு அதை அனுப்பி வைத்தான்.

''கதையாகிப் போனதடா'' என்ற தலைப்புடன் அடுத்தவாரமே கதை பிரசுரமானது. மூன்றும் மனிதன் ஒருவன் படிப்பதுபோல் தன் கதையைத் தானே படித்தான். அச்சில் வரும் எழுத்துக்களுக்கு அதிக சக்தி உண்டு என்பதை அவனல் உணர முடிந்தது. 'சாவித்திரி இதைப் படிக்கட்டும்; இதயம் வெடிக்கட்டும்...... சாவித்திரி!'

கதை வெளியான இரண்டொரு தினங்களில், பத்திரிகையின் ஆசிரியர் சண்முகத்தைத் தேடி அவனுடைய அறைக்கு வந்துவிட்டார்.

''எங்கள் பத்திரிகை இதுவரை வெளியிட்ட கதைகள் எல்லாவற்றையும் தூக்கியடித்து விட்டது உங்கள் கதை! ரொம்ப அருமையாக எழுதியிருக்கின்றீர்கள், மிஸ்டர் சண்முகம்'' என்று பாராட்டிவிட்டு, ஐம்பது ரூபாத் தாள் ஒன்றை அவனிடம் நீட்டினர்.

ஆச்சரியத்துடன் அவரைப் பார்த்துவிட்டு, பின் அமைதியாகச் சொன்னன். ''என்னை மன்னித்துக் கொள்ளுங்கள். உங்கள் மனம் நிறைந்த பாராட்டுதல்களே எனக்குப்போதும். நான் பணத்திற்காக எழுதவில்லை. பணம் எனக்கு அவசியமில்லை''.

''உங்களை நான் தவருகக் கருதவில்லை. மிஸ்டர் சண்முகம். இலட்சியத்திற்காகத்தான் நீங்கள் எழுதுகின்றீர்கள் என்பது எனக்குத் தெரியும். எழுத்தாளனுக்குக் கையும்கற்பனையும் இருப்பதைப்போல் காய்ந்த வயிறும் இருக்கிறதென்பது எங்கள் பத்திரிகை முதலாளிக்கு நன்கு தெரியும். உயிரற்ற கடதாசிக்கும் மையிற்கும் காசு கொடுப்பவர்கள், உடலும் உணர்ச்சியுமுள்ள கதாசிரியனுக்குக் காசு கொடுக்கவேண்டாமா? உங்கள் கதைகளினல் பத்திரிகை வளர்கின்றது; படிப்பவர்களிடம் பண்பு வளர்கின்றது. உங்கள் கதையின் விலையாக இதைக் கருதாமல் உங்கள் இலட்சியப் பணிக்கு நாம் கொடுக்கும் சிறிய அன்பளிப்பாக ஏற்றுக்கொள்ளுங்கள்'' என்று கூறிப் பணத்தை அவன் கையில் திணித்தார்.

ஆசிரியர் கூறிய சமாதானம் சண்முகத்திற்குத் திருப்தியாயிருந்தது. ''எழுத்தாளனைக் கௌரவிக்க வேண்டுமென்று நீங்கள் நினைக்கின்றீர்கள்; உங்கள் முதலாளி நினைக்கின்ருர். உண்மையிலேயே நான் மகிழ்ச்சியடைகின்றேன். இந்த நாடு இனி உருப்பட்டுவிடும்.'' நன்றி பொங்க அவன் கூறினன்.

''இன்னும் ஒன்றை மறந்துவிட்டேன் மிஸ்டர் சண்முகம்! இவை எல்லாம் உங்கள் கதையைப் பாராட்டி எழுதப்பட்ட கடிதங்கள்'' என்று சொல்லி ஏராளமான கடிதங்களை அவனிடம் கொடுத்தார் ஆசிரியர்.

ஐம்பது இலட்சத்திலும் பார்க்க அதிகம் பெறுமதியானவை அவை. மூலை முடுக்குகளிலிருந்தெல்லாம் கடிதங்கள் வந்திருந்தன. பெரியவர்கள், சிறியவர்கள், இளைஞர்கள், எழுத்தாளர்கள், மாணவர்கள், மாணவிகள்— இப்படிப் பலதரப் பட்டவர்கள் கதையைப் பாராட்டி எழுதியிருந்தார்கள். ஒரேமூச்சில் எல்லாவற்றையும் படித்து

விட்டு, உவகைபொங்க, முன்னுலிருந்த ஆசிரியரை நிமிர்ந்து பார்த்தான்.

"எனக்கு இவ்வளவு வாசகர்களைச் சம்பாதித்துத் தந்தது உங்கள் பத்திரிகைதான். உங்களுக்கு எப்படி நன்றி செலுத்துவதென்றே தெரியவில்லை".

"நன்றியெல்லாம் ஒருபுறம் இருக்கட்டும். நீங்கள் அடிக்கடி எங்கள் பத்திரிகையில் எழுதவேண்டும் என்று எங்கள் முதலாளி விரும்புகின்றுர். முடியுமானுல் ஒரு தொடர்கதையே எழுதித் தாருங்கள். உங்களுக்கு எல்லா வசதிகளையும் நாம் செய்து தருவோம். எங்கள் அலுவலகத்திலேயே உங்களுக்குத் தனியிடம் ஒதுக்கித் தருவோம். இங்கிருந்து எழுத முடியாவிட்டால் அங்கே வாருங்கள். நல்ல, அமைதியான இடம் அது."

சண்முகம் யோசித்துப் பார்த்தான். இனி மட்டக்களப்பிற்குச் செல்வதென்பது முடியாத காரியம். பாரதி கல்லூரியும் வேண்டாம். படிப்பிக்கும் தொழிலும் வேண்டாம். அந்தத் திசையிலே தலைவைத்துப் படுக்கக்கூட அவன் விரும்பவில்லை. அவனுக்கு நிம்மதியளிக்கக்கூடியது எழுத்துத்தான். வாழ வகை செய்யாவிட்டாலும் பரவாயில்லை. வாழ்க்கையை மறப்பதற்காகவாவது வழி செய்யாதா? எழுத்தின் தரமறிந்து ஊக்கப்படுத்தும் ஓர் ஆசிரியருடன், எழுத்தாளனின் நிலையறிந்து உதவி செய்யும் ஒரு முதலாளியுடன் அவன் ஏன் ஒன்றுசேர்ந்துஒத்துழைக்கக்கூடாது?

அவன் தன் சம்மதத்தைத் தெரிவித்தான்.

பகலில் பத்திரிகை அலுவலகத்திற்குச் சென்று எழுதினுன். இரவில் தன் அறையிலேயே இருந்து எழுதினுன். தன் கவலைகள் எல்லாவற்றையும் ஒரு பக்கத்தில் கட்டி வைத்துவிட்டு அவன் எழுதினுன். கதை விறு விறுப்புடன் வளர்ந்தது.

ஓய்வு நேரங்களில் அலுவலகத்திற்கு வரும் பத்திரிகைகள் அனைத்தையும் வாசிப்பான். மற்றைய எழுத்தாளர்கள் எழுதும் கதைகளை மிக நுணுக்கமாகப் படிப்பான். தினப்பத்திரிகைகளில் வெளியாகும் முக்கியமான செய்திகளையும் மனத்தில் பதித்துக் கொள்வான். குறிப்பாகச் சொன்னுல், காலையில் ஏதாவது தினசரிப் பத்திரிகையைப் பார்க்காவிட்டல், அவனுக்கு எழுத்தே ஓடாது.

தினசரிப் பத்திரிகை வருவதற்கு ஒருநாள் சற்றுத் தாமதமாகி விட்டது. எழுதவும் முடியாமல், எழுதாமல் இருக்கவும் முடியாமல் சங்கடப்பட்டுக்கொண்டிருந்தான். அந்தவாரத்திற்குரிய அத்தியாயத்தை அன்று கொடுத்தே ஆகவேண்டும். என்ன செய்வது?

எதுவுமே செய்யாமல் பத்திரிகைக்காரப் பையனை எதிர்பார்த்தபடி இருந்தான். கடைசியில் சினிமாப் பாட்டொன்றை முணுமுணுத்துக் கொண்டு வந்தான் பையன்,

ஆவலுடன் பத்திரிகையை விரித்தான் சண்முகம். ஒவ்வொரு பக்கத்திலும் தன் கண்ணேட்டத்தைச் செலுத்தினுன். திருமண அறிவித்தல்கள் வெளியாகும் பக்கத்தில் அவன் கண்கள் குத்திட்டு நின்றன. அவன் மனம் குழம்பியது.

—தொடரும்.

# "நல்லூரில் இசைவிழா"

— யாழ்ப்பாணி —

நல்லவற்றுக்குப் பெயர் போன நல்லூரிலே மே மாதம் முதல் வாரத்தில் ஆரம்பமாகி எட்டுநாட்களாக நடந்து முடிந்த இசைவிழாவைப்பற்றி நாமும் நாலுவார்த்தை சொல்ல ஆசைப்படுகிறோம்.

நல்லூர் முருகனுடைய வடக்கு ரத வீதியிலே அமைந் திருந்த அலங்கார மேடையும் பந்தலும் இந்த எட்டுத் தினங் களிலும் பல கலைஞர்களையும், பல்லாயிரக்கணக்கான ரசிகப் பெருமக்களையும் தம் வசப்படுத்தி நாட்டுக்கு நல்லதொரு காரி யத்தைச் செய்த பெருமையைப் போற்றுதிருக்கமுடியாது.

அகில இலங்கைச் சங்கீத வித்துவ சபையார் ஏற்பாடு செய்திருந்த இவ்விசைவிழா யாழ்ப்பாண மக்கள் மனதில் குதூ கலத்தை விளைத்து மற்றும் சில சபாக்களையும் இசைவிழா எடுக்க ஊக்கப்படுத்தி நிறைந்தது என்றால் அது வெறும் பேச்சல்ல, உண்மைதான்.

ஈழநாட்டின் பல பகுதியிலிருந்தும், இந்திய நாட்டிலிருந்தும், வந்து பங்குபற்றிய வித்வான்களில் பலதரமான, ரகமான இன் னிசைக்கச்சேரிகள் விழாவை அழகுசெய்தன. நாதஸ்வரம், தவில், வாய்ப்பாட்டு, புல்லாங்குழலிசை, வயலினிசை, தாளவாத்தியக் கச்சேரி என்றினைய நிகழ்ச்சிகள் விறுவிறுப்பாக இடைவிடாது நடந் தன. பங்குபற்ற வசதியற்றுப்போன சில வித்துவான்களின் இடத் தில் மாற்றுக் கச்சேரிகளை உடனுக்குடன் தயார்செய்து வைத்திரு ந்து நிறைவேற்றினார்கள். இறுதி நாளன்று சங்கிதபூஷணம் திரு. சண்முகரத்தினம் அவர்களுக்குக் **"கான வாரிதி"** என்ற சிற ப்புப் பட்டமுந் தந்து கௌரவித்தார்கள், வித்துவசபையார்.

இவையனைத்தையும் போற்றுகிறோம். இத்தனையையும் ஆவ லோடும், பொறுமையோடும் பார்த்தும் கேட்டும் ரசித்த ரசிகப் பெ ருமக்களும் நமதுபாராட்டுக்குரியவர்களே. பொதுமக்கள் ஆதரவு குன்றிப் போனால் யாதொரு காரியமும் சிறப்பாக அமைய முடி யாதல்லவா? சினிமா இசையையும் கதம்பஇசையையுமே ஈழநாட் டார் ரசிக்கத் தெரிந்தவர்கள் என்றதுமாறி, முழுநீளக் கச்சேரிகளை யும் நன்கு ரசிக்க மக்கள் தகுதி பெற்றுவிட்டார்கள் என்

பதையும் காணமுடிந்தது. இவற்றோடு யாம் சில குறிப்புகள் கூறவிரும்புகிறோம். கலைஞர் பெருமக்களே, முழுக்க முழுக்கத் தமிழ் மயமாகவே காட்சி தந்த பொதுமக்கள் மத்தியிலே அவ ரறிந்த தமிழ்ப்பாட்டுக்களை நிறைய இசைக்காது பிறமொழிப் பாடல்களை நிறையநிறைய வாரி வழங்கினீர்களே, இதன் பயன் தான் என்னவோ? நீங்களும் பொருள் அறியாமல் மக்களும் பொருளறியாமல் காலத்தைக்கடத்த நேர்ந்தது பெருமைபடத்தக் கதல்ல. ஒரு சில வித்துவான்கள் அழகிய தமிழ் உருப்படிகளைப் பாடியபோது சபையோர் அத்தனை பேரும் அவ்வித்துவான்கள் பக்கம் சார்ந்து பூரித்தார்களே! இதுவல்லவோ இசையின் பயன்?

போகட்டும், இனிமேலாவது தமிழிசைக்குச் சிறப்புக் கொடுக் குக. "யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழிபோல்'.... என்றல் லவா பாரதியார் பாடித்திரிந்தார்?

கச்சேரிகளில் பல சிறப்பான அம்சங்களோடு அமைந்திருந் தாலும் சில தரக் குறைவாகக் காணப்பட்டதையும் கூறுது விட இயலவில்லை. எனினும் நமது நாட்டின் நிலையில் வளரும் இசை வளரத்தான் வேண்டும், "ஐந்து விரலும் ஒருசமமா" என்பார் களே, அவற்றை மனதிற்கொண்டு இளம் கலைஞர்களே! இடை யருச் சாதனையால் இசையை வளர்ப்பீராக எனக் கேட்கின்றோம்

இறுதியாக....என்ன சில இடங்களில் அபஸ்வரம் ஒலிக்கின் றதே!

சொந்த விருப்பு வெறுப்புக்களை மனதில் வைத்து ஒரு சில நல்ல கலைஞர்களைக் கச்சேரிக்கு அழைக்காமல் விட்டதும், கச் சேரிக்கு ஆயத்தமாகி வாகனவசதியை எதிர்பார்த்திருந்த கலை ஞர் வாகனம் கிடைக்காதமையால் கச்சேரி செய்ய இயலாமற் செய்யப்பட்டதும், கச்சேரி செய்து முடிந்த சில வித்துவான்கள் திரும்பிச் செல்லவாகனவசதி கொடுக்கப்படாததும், பணம் தந் தாற்தான் பாடுவதற்கு இடம் கொடுப்போம் என்று லஞ்ச பாணி யில் குரல் கொடுத்ததும் ஆகிய இவையெல்லாம் அம்பலத்திற்கு வந்த தேனோ?

இந்த அபஸ்வரங்களெல்லாம் மறுவருட இசை விழாவில் இடம் பெறுதிருந்தாற் தான் உங்கள் சேவை பூரணம் பெறும் என்பதைக் காதோடு காதாகச் சொல்லிவைத்து மிகுந்த சிரமப் பட்டு இவ்விழாவினை எடுத்து நாட்டுக்கு நலஞ் செய்த வித்துவ சபையாராகிய உங்களை எங்கள் மனதாரப் போற்றுகிறோம்.

**இசைச் செல்வம் வாழ்க, வளர்க!**

கணபதி துணை

# PILLAIAR VILAS

General Merchants & Direct Importers.

பித்தளை, அலுமினியப் பாத்திரங்கள். பட்டுக் குடை, வெண்சாமரை யாவும் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.

சுகாதார முறைப்படி தயார் செய்யப்பட்ட வற்றல் ஊறுகாய்வகை என்றும் கிடைக்கும்,

# பிள்ளையார் விலாஸ்

(அதிபர்: சி. ம. கணபதிப்பிள்ளை)

107 கே. கே. எஸ், வீதி : : யாழ்ப்பாணம்.

---

# நம்பிக்கையும் சுத்தமுமான

ஆயுள்வேத மருந்துகள்
மருந்துச் சரக்குகள்

## கஸ்தூரி, கோரோசனை
## குங்குமப்பூ அஷ்டவர்க்கம்,

## ஆயுள்வேத இஞ்செக்ஷன்
டிஞ்சர் முதலியன
சகாய விலைக்குக் கிடைக்கும்

# எஸ். சுப்பிரமணியம் அன் கோ

53. கே. கே. எஸ் ரோட், : : யாழ்ப்பாணம்.

# வளருந் தமிழ்

**பாட்டாளி வாழ்க்கையிலே! எழுதியவர்: கச்சாயில் இரத்தினம். பகுத்தறிவுப் புத்தகப் பண்ணை, 237 பருசலை வீதி, எட்டியாந்தோட்டை**

இலங்கை மலைநாட்டுத் தொழிலாளர்களின் வாழ்க்கை ஒரு சோக காவியம். அதிகாரத்தினாலும் அடக்கு முறையினாலும் அவர்கள் அல்லற்படுகின்றார்கள். ஒற்றுமை இன்மையாலும் ஒழுக்கமற்ற வாழ்வாலும் அவர்களில் பெரும்பாலோர் தம் வாழ்க்கையையே நரகமாக்குகின்றார்கள். அந்த வாழ்க்கையை வர்ணிப்பதுதான் 'பாட்டாளி வாழ்க்கையிலே' என்ற இந்தச் சிறுகதை.

நாள் முழுதும் பாடுபட்டுழைத்து, பணம் முழுவதையும் குடியிலும் சூதாட்டத்திலும் இழக்கும் வேலன், வறுமையால் வாடி வதங்கும் அவன் மனைவி காத்தாய், குழந்தை கோகிலா, சீர்திருத்தவாதி முத்துராமன் ஆகியவர்கள்தான் கதையின் முக்கிய பாத்திரங்கள். வேலனின் போக்கினால் வெதும்பிய காத்தாய் வீட்டைவிட்டே வெளியேறி, முத்துராமனின் முயற்சியால் நல்ல பேச்சாளியாகின்றாள். தொழிலாளர்களிடையே மது எதிர்ப்புப் பிரசாரம் செய்கின்றாள். அவளுடைய சொற்பொழிவைக் கேட்டு மனம் மாறுகின்றான் வேலன். ஆயிரக் கணக்கானோருக்கு முன்னே, மனைவியின் கால்களிலே விழுந்து மன்னிப்புக் கேட்கின்றான்

கதையில் முற்போக்கு அம்சம் அதிகமுண்டு. தொழிலாளரின் வாழ்க்கை நன்கு படம் பிடிக்கப்பட்டுள்ளது. ஆனால் வசனத்தில் உயிரோ, கதைப் போக்கில் விறுவிறுப்போ இல்லை. என்றாலும் ஆசிரியரின் முயற்சி பாராட்டிற்குரியது,

—சரா.

**சுடரொளி: நான்காம் இதழ் — சித்திரை 1960. வெளியீடு. செங்குந்த இந்துக் கல்லூரி, மாணவர் மன்றம், திருநெல்வேலி.**

இவ்விதழ் தமிழ் ஆங்கிலம் இரு மொழிகளிலும் வெளியிடப்பட்டிருக்கிறது. தமிழ்ப் பகுதி ஆசிரியர்கள் செல்வன் சீ. பரராஜசிங்கம், செல்வி ஈ. தவமணிதேவி. ஆங்கிலப் பகுதி ஆசிரியர்கள் செல்வன் எஸ். சிவாநந்தன் செல்வி ஈ. தவமணிதேவி.

இன்றைக்கு உலகம் போகிற போக்கில், மனிதருக்கு பகுத்தறிவு என்ற ஒரு ஆறுவது அறிவு இருப்பதை நினைவூட்டவேண்டும் என்று 'மனிதப் பண்பு' கட்டுரையாளர் கருதியிருப்பின் வியப்பில்லை. கட்டுரை சில திருப்பங்களில் நிறுத்திச் சிந்திக்க வைக்கிறது. நாளைய மனித சமூகத்தின் இளம் பயிர்களான மாணவர் மலர் ஒன்றில் இப்படியான கட்டுரை வெளியிட்டிருப்பது பொருத்தமானதே. அடுத்து 'கற்பின் தெய்வம்' 'கம்பன் பெருமை' ஆகியனவும் சுவையான இலக்கியக் கட்டுரைகள். முன் இரு கட்டுரைகளிலும் வள்ளுவன் வந்து கட்டியம் கூறியபோதிலும், அதிகமில்லையே! இன்னும் உபயோகமான சில தமிழ் ஆங்கிலக் கட்டுரைகள் உண்டு.

இருபத்தொன்பதாம் பக்கத்தை வெறுமனே வெளியிட்டிருக்கலாம். தலைப்பை வேறு போட்டுத் திகைக்க வைத்துவிட்டார்கள். உபயோகமில்லை என்று அடித்துக் கூறி விடலாம், 'தூக்குத் தூக்கி' போன்ற இரண்டொன்று இல்லையென்றால்.

முழுவதும் கிளேஸ் காகிதத்தில் வெளியிடப்பட்டிருக்கும் இம்மலரில், இடையிடையே கல்லூரி சம்பந்தப்பட்ட புகைப்படங்கள் காணப்படுகின்றன. கவர்ச்சியான அச்சுப் பதிவு. கையடக்கமாக இருக்கிறது.

மாணவரது முயற்சி: பாராட்டத்தான் வேண்டும், கண்டிப்பாக!

—சிவா.

# "மலையுருகும் மச்சி மனமுருகவில்லையோகா"

கா. நவரெத்தினம்

கிராமப் பாடசாலையில் படித்து முடிந்ததும், ஆங்கிலம் கற்பதற்காக நகரத்திற்குச் சென்றுவிட்டான், மூர்த்தி. "பாடசாலைக்குப் போனதும் கடிதம்எழுதுகிறேன்" என்றுசொல்லி விட்டுப் போனவன் வாரங்கள் நான்கு ஓடி மறைந்தும் பதில் போட வேயில்லை.

கடிதத்தை எதிர்பார்த்து ஏமாந்த தேவியின் உள்ளத்தில் சந்தேகம் முளைவிடுகிறது. ஊரில் உலாவிய வதந்திகளுக்கு கண், மூக்கு வைத்துக் கற்பனைசெய்து பார்க்கிருள். இதயத்தை வேதனை கௌவிக் கொள்கிறது, அந்தத் துயரத்தில் மனதைத் திறந்து

குலைந்து விடுமே" என்ற பரிவினுல் ஆறுதல் சொல்கிருள்.

"கோடைக்குப் பூத்த
குடைத்தாமரைப் பூவே
வாடாமல் நீங்க இருங்கோ —
உங்களை
வாங்க வருவான் பொடியன்"

என்ருலும் மாமியாரின் பேச்சை எப்படி நம்பமுடியும். பட்டிக் காட்டில் இருக்கும் தன்னிலும் பார்க்க நகரத்தில் பூசி மினுக்கிய நாரீமணிகள் அவரை மயக்கிவிட்டால்? நாம் இலவு காத்த கிளியாகிவிட வேண்டியது தான். அதிலும் இந்தக் காலத்தில் 'காதல்' என்று சொல்கிருர்களே? அத்தானுக்கும் அப்படி ஏதாவது

---

**நாட்டுப் பாடல் என்றவுடனே 'சட்'டென்று நமது நினைவிற்கு வருவது மட்டக்களப்பு. ஒன்ரு, இரண்டா, ஓராயிரத்துக்கு மேற்பட்ட பாடல்கள் அங்கேயுள. சொல்லினிமை, எளிமை, அழகு நிரம்பிய சில கவிதைகட்குஅழகான விளக்கம் கொடுத்துள்ளார் அன்பர் நவரெத்தினம்.**

---

ஈரலைக் குத்தி இடத்த
எறிந்ததுபோல் — ஏன்ர
மாணிக்கக்கல்லை வழிப்பயணம்
போகவிட்டேன்"

என்று பாடுகிருள். இது, அடுத்த வீட்டிற்கு வெற்றிலை வாங்க வந்த மாமியாரின் செவிகளில் விழுகிறது. "பாவம்! காதலனை நினைந்து ஏக்கம் கொள்கிருள். இப்படி எண்ணி, எண்ணி உருகினுல் உடம்பு உருக்

ஏற்பட்டுவிட்டால்? மாமியாரால் குறுக்கே நிற்க முடியுமா...? அல்லது அவருக்கு அப்படி நடக்கமாட்டாது என்பதுதான் என்ன திண்ணம்?"

இப்படியான அர்த்தமற்றதும், முடிவற்றதுமான பல சிந்தனைகளினுல் அவள் மூர்த்தியின்மேல் கொண்ட அன்பு அணு, அணுவாகக் கரைந்துவிடலாம் போல் தோன்றியதும்:

"பச்சமிருக்குப் பறக்கச்
சிறகிருக்கு
எல்லாமிருக்கு —எங்கட
எழுத்து விதி எப்படியோ"

என்று மாமியாரிடம் பட்டும் படாமலும் சொல்கிருள்.

❁ ❁ ❁

பட்டணத்தில் படித்துக் கொண்டிருந்த மூர்த்திக்கும் தேவியின்மேல் அன்பு இல்லாமல் இல்லை. அளவு கடந்த கா...த...ல் இருந்தும் என்ன செய்யலாம். அவளுக்குக் கடிதம் எழுதப் பயமாக இருந்தது. பேசி இருக்கும் கல்யாணம்தான். என்ருலும் இந்த வயதில் காதல் கடிதங்கள் எழுதினுல் மாமன், மாமி பரிகசிப்பார்களே என்ற தன்மான உணர்விஞல் பேசாது இருந்துவிட்டான்.

தவணை முடிந்தது. பாடசாலைக்கு ஒருமாத விடுதலை கிடைத்ததும் வீட்டுக்கு ஓடோடி வருகிருன். ஒழுங்கையால் செல்லும்பொழுது நன்ருகப் பார்த்தும் மூர்த்தியினுல் தேவியைக் கண்டுகொள்ள முடியவில்லை. ஆனுல் அவள் கவனித்துக்கொண்டாள். தாய் வீட்டிற்குச் சென்றவன் தன்னிடம் வருவான்" என்று எதிர்பார்த்து, எதிர்பார்த்து அவள் கண்களும் பூத்துவிட்டன. ஏமாற்றத்தின் சுமை தாங்கமாட்டாது நெஞ்சு பிளந்துவிடும் போலிருந்தது. மரத்திலே இருந்த காகத்தை நோக்கிச் சொல்லுகிருள்:

"சிற்ருெழுங்கையாலே செருப்
பழுது
போற செப்பம்
ஆரென்று பார்த்தேன்—எங்கட
மாமியின்ர மூத்த மகன்"

தேவியின் துயரத்தைக் கேட்டு அனுதாபப்படுவதுபோல் காகமும் "கா. கா. கா" என்று கத்தியது. மீண்டும் அதைப் பார்த்துக் கேட்கிருள்.

"கத்திறயே காகம் என்
கண்மணியைக் கண்டாயோ
சந்தித்துக் கேட்டால் — என்ர
சரித்திரத்தைச் சொல்வாயோ"

ஆம் என்று சொல்வதுபோல் எழும்பிப் பறந்து சென்றது. காகச் சாத்திரத்தின்மேல் விசுவாசம் கொண்ட அவள் உள்ளத்தில் நம்பிக்கை பிறக்கிறது. சட்டென்று ஒரு குரல் கேட்டுத் திரும்பிப் பார்க்கிருள். அடுத்த வீட்டு ஊஞ்சலில் மூர்த்தி வந்து அமர்கிருன்.

இதைக் கண்டதும் சந்தோஷம் தாங்கமுடியவில்லை, அவளால். மறைந்து நின்று ஆசை தீருமட்டும் அவன் அழகை அள்ளி, அள்ளிப் பருகுகிருள். மூர்த்தியோடு ஒருதரம் பேசினுல் தேவலைப்போல இருந்தது.

"பச்சைக் கிளியே என்ர
பட்டணத்து நற்சரக்கே
வெள்ளிப் பிரம்பே — ராசா
வந்தேனென்று சொன்ன
—யளோ"

அடுத்த வீட்டு ஊஞ்சலில் இருக்கிறீர்களே என்னிடம் ஒருதரம் வந்துவிட்டேன் என்று சொன்னீர்கள்ா? என்று கேட்கிருள்.

தேவியின் வேதனையில் தோய்ந்த பாட்டைக் கேட்டதும் மூர்த்திக்கு அவளோடு ஆசைதீரப் பேசவேண்டும் போல் தோன்றியது. ஆனுல் வீட்டில் மாமா இருப்பாரே எப்படிப் பேச முடியும். ஒருவேளை தேவியும் மாறி இருக்கலாம். அவளின் மனம் எப்

படி இருக்கிறதோ என்ற சந்தேகத்தில்,

"சீறிவரும் காற்றினிலே
சுழன்றுவரும் இலையதுபோல்
தேடிவந்தேன் கண்ணே—உன்ர
நாட்டமெல்லாம் எப்படியோர்"

அதற்கு அவள்,

"உன்னுறவும் என்னுறவும் மச்சான்
ஒன்றுபட்டுத்தானிருந்தால்
ஊர் திரண்டு வந்தாலும்
ஒன்றும் செய்யப் போவதில்லை'

நாம் இரண்டுபேரும் விரும்பி விட்டோமானால் போதும். பின்பு இந்த ஊரில் உள்ளவர்கள் அத்தனை பேரும் எதிராகத் திரண்டுதான் வந்தாலுங்கூட எங்களை எதுவுமே செய்துவிட முடியாது, என்று சொல்கிறாள்.

இனி என்ன? தேவி நமக்குத்தான் என்ற பூரிப்பில் தனிமையில் சந்தித்துக் கூடிக் குலாவ வேண்டும் என்ற ஆசை தூண்டுகிறது மூர்த்தியை.

"ஏறுபொழுதே எரிக்கிலம் பூ
மேனியளே
சாய்பொழுதுச் சந்திரனே
—உன்னைச்
சந்திப்பதெப்பொழுது!"

உதய சூரியன் போன்ற பிரகாசமும் எரிக்கிலம்பூ போன்ற மேனியழகும், அஸ்தமிக்கும் சந்திரன் போன்ற வதனமும் கொண்ட உன்னைச் சந்திப்பது எப்பொழுது என்று கேட்கிறான். அதற்கு அவள்:

"கூவும் பருவமில்லக் குஞ்சு
விடை கொள்ளயில்ல
ஆரம் கனியவில்லை –உங்களுக்கு
ஆத்திரம் வேணும் மச்சான்"

"நான் இன்னமும் சிறியவள் தானே. தனிமையில் சந்திக்கக்கூடிய பருவத்தை இன்னும் அடைந்துவிடவில்லை. அதுவரை நீங்கள் ஆத்திரப்படாமல் இருங்கள்; மச்சான்" என்று சொல்கிறாள்.

அதற்கு அவன்:

"கல்லும் கரையும் மச்சி
காராம்பசு கன்றீனும்
மலையும் உருகும் கிளியார்தம்
மனமுருகவில்லையோகா"


உன்னுடைய மனம் இன்னமும் இளகவில்லையா என்று கேட்டான்.

வெண்ணை திரண்டு வரும் பொழுது தாழி உடைந்ததுபோல் சட்டென்று மூர்த்தியின் தந்தை அங்கே வந்ததும் அளவிடமுடியாத ஏமாற்றத்தோடு அவ்விடத்தை விட்டுப் பிரிந்தனர்.


## பிரபல எழுத்தாளர் சோக்கன் எழுதும்

# பட்ட கடன்

என்ற சிறு கதை அடுத்த இதழில் வெளியாகின்றது.




**மேடு சிரித்தது. பள்ளம் அழுதது. ஆனால் மேட்டில் பயிர் செய்த கணபதி சிரிக்கவில்லை. வியர்வை சிந்தி 'வெள்ளாமை' செய்தவன் இப்போது கண்ணீர் சிந்திக் கதறுவதேன்? பட்டப்படிப்புடன் பாடுபட்டுழைக்கும் எழுத்தாள நண்பர் தரும் ''முற்போக்குக் கதை' இது.**

புத்தூர் கிராமம்;—அதை உங்களில் ஒரு சிலருக்குத்தான் தெரிந்திருக்கக் கூடும். அவ்வளவு சிறிய கிராமம் அது. யாழ்ப்பாணத்திலிருந்து நல்லூருடாகச் செல்கிறதல்லவா பெரியசாலை? அதன் வழியே சென்றால், ஒன்பதாம் 'மைல்' கட்டை வந்தவுடன், புத்தூர் வந்துவிட்டதென்ற அர்த்தம். செழிப்பான கிராமந்தான் புத்தூர். ஆனால் அங்கு வாழும் பெரும் பகுதி மக்களுடைய—மனித மந்தைகளுடைய வாழ்க்கை...

தெருவழியே அவர்கள்—ஒரு சாதி மக்கள் செல்லும் பொழுது, காவோலையை இழுத்துக் கொண்டு செல்ல வேண்டுமாம்! எதற்காக? ''சண்டாளர்";—தாழ்ந்த சாதியான் வருகிறான் என்று அறிவிப்பதற்கு! இரவிலேதான் அவர்கள் செல்ல வேண்டும். உயர் சாதியார் அவர்களைப்பார்த்துவிட்டால், அசுத்தமாகி விடுமாம்; பாபமாம்!


அது மட்டுமா?

ஒரு பிரபுவின் வட்டாரத்திலே திருமணம் நடந்தால், மணப் பெண் தனது ''முதல் இரவை" அந்தப் பிரபுவுடன் கழிக்கவேண்டுமாம்.

இவைகள் எல்லாம் என்றோ நடந்தவை.

இன்று.........

மனித நாகரீகம் வளர்ச்சியடைந்து, முன்னேறி விட்டதல்லவா! பெரியதெருவுக்குக் கிழக்குப் பக்கமாக ஒரு சில குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றன.



கன்னிப் பெண்ணின் பிறை நெற்றியிலே திலகமிட்டது போல, ஒரு தென்னஞ் சோலை, வயல் நிலத்து மத்தியிலே கெம்பீரமாக நிற்கின்றது. வயலின் கிழக்கு எல்லைக் கோட்டில் சதுப்பு நிலம். அங்கொன்றும் இங்கொன்றுமாக தாளம் பற்றைகள் குத்திட்டு நிற்கின்றன. வானமும் பூமியும் கட்டித் தழுவி முத்தமிடும் எல்லைக்கோட்டில், யாழ்ப்பாணத்தின் பெயர் போன உப்பாறு.

தென்னஞ்சோலையை அண்டித்தான், அருணாசலம் உடையாரின் வயல் நிலம்; மேடும் பள்ளமும்.

விரைவிலே தாயாகப் போகும் கன்னிக் கர்ப்பவதி, தாய்மை உணர்ச்சி பொங்கி வழிய தனது கணவருடைய முகத்தைப் பார்த்துச் சிரிப்பது போல, மேட்டு நிலம் வானத்தைப்பார்த்துச் சிரித்துக் கொண்டிருந்தது.

பள்ள நிலம்......?

குலசிங்க மணியகாரர் பரம்பரையிலே பிறந்தவர் அருணாசல உடையார். புத்தூர்க்கிராமத்திலுள்ள பூமியில் மூன்றில் இரண்டு பங்கு குலசிங்க மணியகாரருடையது; அது அன்று.

குலசிங்க மணியகாரருடைய நிலம் குறைந்து, தேய்ந்து மிஞ்சியதுதான் அருணாசலம் உடையாரின் முதுசொம். உடையாருடைய குடும்ப வாழ்க்கைக்குப் போதுமான, இல்லை, மேல் மிச்சமான வருவாயைக் கொடுத்து வந்தது அவருடைய வயல் நிலம். ஒரு சிறு பகுதிதான் விளை பூமி. மிகுதி மேட்டு நிலம்; பயிர் செய்ய முடியாதிருந்தது ஒரு காலத்தில்.

கணபதி, அருணாசலம் உடையாரின் கை ஆள். அவருடைய வயலில்தான் வேலை செய்து வாழ்ந்தான்.

"நாங்கள் 'நயினாருடைய' உப்பையல்லவா தின்று வாழ்கின்றோம்," என்று அடிக்கடி கணபதி சொல்லிக் கொள்வது வழக்கம்.

■ ■ ■

மாலைச் சூரியனின் ஜோதிச் செக்கர் மெள்ள மெள்ளக் கருகிக் கொண்டிருந்தது. அடி வானச் சிவப்பை, படகு போல அசைந்து மிதந்து வந்த கருமுகில்கள் கௌவத் தொடங்கின. சூரியனுடைய பொன்நிறக் கதிர்கள், விளைந்து, காய்ந்து, குலுங்கிய கதிர்க் குலைகளிலுள்ள, நெல் மணிகளில் பட்டுத் தெறித்தன. வயல் பரப்பு பொன் மயமாக இருந்தது.

மேட்டு நிலம் சிரித்துக் கொண்டிருந்தது. வயல் வரம்பில் நின்ற கணபதியின் மார்பு ஆனந்த மிகுதியால் மிதந்து தாழ்ந்தது. புயங்கள் பூரித்தன. அவனுடைய ரத்தத்தை வியர்வையாக உறிஞ்சிய அந்த மேட்டு நிலம் இந்த வருடம் தான் அவனைப்பார்த்து அன்புச் சிரிப்புச் சிரித்தது.

"எட்டுப்பரப்பு...... எண்மூண்டு இருபத்திநாலு புசல்..." மனதுக்குள் கணக்குப் போட்டான் கணபதி.

"முந்தின மூண்டு பிள்ளையளையும் பெத்த பொழுது கூப்பன் அரிசியும் ஆட்டா மாவும் திண்டு...... அவளுக்குச் சொறி பிடிச்சு......பிள்ளைகளுக்கும் 'வகுத்தால் அடித்து... ...காசில்லாமல் கஷ்டப்பட்டது......" எல்லாச் சம்பவங்களும் கணபதியினுடைய மன அலையில் மிதந்து மோதிச் சென்றன.

"இந்த வரியம் வெள்ளைச்சி அதிட்டசாலி தான். பிள்ளை பெறு

வதுக்கு இரண்டு மாதம் இருக்கு. வயல் அரிசிச் சோறு அதுவும் என்னுடைய கையாலே செய்தது. கொஞ்ச நெல்லை வித்து பிள்ளைப் பேறுச் செலவுக்கு எடுக்கலாம்......" எண்ணங்கள் கணபதியினுடைய உள்ளத்திலே புரண்டு நெளிந்தன. ஆனந்த மிகுதியால் தனக்குள் சிரித்துக் கொண்டான்.

வரம்பின் எதிர்ப் புறத்திலுள்ள பள்ள நிலப்பக்கம் திரும்பினான் கணபதி. அவனுடைய உள்ளத்திலே ஏக்கம் படம் எடுத்தது. நெற்றியை உள்ளங்கையால் அழுத்தினான்.

"கணபதி ......"

திடுக்கிட்டுத் திரும்பிய கணபதியின் எதிரிலே அருணாசல உடையார் நின்று கொண்டிருந்தார்.

"என்ன நயினார்......"

ஒடுங்கிக் குடங்கியபடியே, தலையில் கட்டியிருந்த சால்வைத் துண்டை எடுத்துக் கக்கத்துக்குள் வைத்துக் கொண்டு, உடையாருடைய முகத்தைப் பார்த்தபடியே நின்றான் கணபதி.

"உனக்குத்தான் இந்த வரியம் 'லக்' அடிச்சிருக்கு." கசப்புடன் கூறினார் உடையார்.

'எல்லாம் நயினாருடைய தயவாலே தானே......" அவனுடைய சொற்களிலே நன்றி கலந்திருந்தது.

"அது சரி கணவதி, இந்த வரியக் குத்தகைக் காசைப் பிறகு பாத்துக் கொள்ளலாம். எனக்கு வெள்ளாண்மையும் புகைஞ்சு போச்சு. காசுக் கஷ்டம். போன இரண்டு வரியக் குத்தகைக் காசையாவது தந்திடு"

"வெள்ளாண்மை வெட்டி, ஒரு மாதத்துக் குள்ளை நயினாற்றை காசைத் தந்திடுகிறன்."

"என்ன, ஒருமாதத்துக்குப் பிறகா? பிறகேன் எனக்குக் காசை? அது மட்டும் நான் என்ன செய்ய?" உடையாருடைய குரலிலே கடுகடுப்புத் தொனித்தது.

"நயினார்......நான் இப்ப காசுக்கு எங்கே போக? யார் தரப் போகினம்? நெல்லு வெட்டி, அடித்து, வித்துத்தானே......"

'டே கணவதி! குத்தகைக் காசு தந்திட்டுத்தான் நெல்லு வெட்ட வேணும். இல்லாட்டி......" நாகபாம்பு போலச் சீறி விழுந்தார் உடையார். கணபதியினுடைய உடல் நடுங்கியது. அவனுடைய ஆசைக் கனவுகள் எல்லாம், இடிந்தகோட்டை போலத்தரை மட்ட மாகின. கண்கள் கலங்கின.

"நயினார் தயவு பண்ண வேணும் ...... ஐஞ்சாறு நாள் தவணை......"

"முடியாது!"

* * *

"நயினார்..."

"என்னடா?"

"காசு..."

தெய்வத்திற்குப் பயபக்தியுடன் பிரசாதத்தைப் படைப்பதுபோல, அருணாசலத்தின் காலடியில் பணத்தை வைத்தான் கணபதி.

"எவ்வளவு?"

"நாற்பத்தைஞ்சு ரூவா..."

நாற்பத்தைஞ்சு ரூபாயா? என்ன ஒருவரியக் காசுதானே. வட்டியும், மற்றவரியக் காசும்?"

"பத்து நாளைக்கை தாறன் நயினார். இதுவும் வெள்ளைச்சியின்றை

பிள்ளைப் பெத்துச் சிலவுக்கெண்டு அவளுடைய தாலியை அடைவு வைச்சு எடுத்த காசு.''

பணத்தை எடுத்து மடியில் வைத்துக் கொண்டார் அருணாசலம். வந்த பணத்தை ஏன் விடுவான் என்ற எண்ணம் போலும்!

''கணவதி, மிச்சக் காசையும் வட்டியையும் கொண்டுவந்து வைத்துவிட்டு நெல்லை வெட்டு. நாளைக்குக் காசு இஞ்சை வரவேணும். தவறினுல் நாளைவிட்டு அடுத்தநாள் உன்ரை நெல்லை வெட்டி......''

கணபதிக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை. தலையைத் தொங்கப் போட்டுக்கொண்டு தனது வீட்டை நோக்கி நடந்தான். அவன் கண்முன் சிரிக்கும் மேட்டுநிலம் தோன்றிக் கண்ணுமூச்சி விளையாடியது.

* * *

அருணசல உடையாருடைய குடிமைக்காரன், அடிமை கணபதி. அவனுடைய பாட்டன், முப்பாட்டன் எல்லோரும் குலசிங்க மணியகாரருடைய குடும்பத்துக்கும், அவருடைய பரம்பரைக்கும் அடிமையாக, தொண்டுசெய்து வாழ்ந்துகொண்டு வந்தார்கள்.

கணபதி அருணசல உடையாருடைய வயலில் வேலைசெய்து, அவருடைய மாடு கண்டுகளைப் பார்த்து, உடையார் கொடுக்கும் அற்ப கூலியுடன் வாழ்ந்து வந்தான். அவனுடைய மனைவி வெள்ளைச்சியும், மூன்று பிள்ளைகளும் செத்துக் கொண்டே வாழ்ந்தார்கள். வெள்ளைச்சிக்கும் உடையார் வீட்டிலேதான் வேலை. கணபதியினுடைய குடும்பம் உடையாருடைய குடும்பத்துக்காகவே வாழ்ந்து வந்தது.

அருணசல உடையாருடைய பள்ளநில வயலை தனது சொந்த வயல்போலப் பாடுபட்டு வேலைசெய்து பயிரிட்டு, காவல் காத்து அறுவடை செய்து வந்தான் கணபதி.

அவனுக்குச் சேரவேண்டிய அற்ப கூலியையும் கொடாமல் தட்டிக் கழிக்க, மேட்டுநிலத்தில் ஒரு துண்டை கணபதிக்குக் குத்தகைக்குக் கொடுத்தார் அருணசலம்.

கணபதி பாடுபட்டு, அந்தமேட்டு நிலத்தை வெட்டிப் பண்படுத்திப் பயிரிட்டான். மழை இல்லாமையால் சென்ற இரண்டு வருடகாலமாக கணபதியின் மேட்டு நிலத்தில் விளைச்சலில்லை. அவனுடைய முயற்சி பயனற்றதாகிவிட்டது.

ஆனுல் இந்த வருடம்...?

நல்ல மழை! கணபதிக்கு நல்ல விளைச்சல்!

அருணச்சல உடையாருக்கு?

பள்ள நிலத்திலேயுள்ள பயிர்கள் எல்லாம் வெள்ளத்திலே அழுகிச் செத்து மடிந்தன. ஒரே ஒரு துண்டு மேட்டு நிலம்தான் விளைச்சல் எடுத்தது.

கணபதியின் மேட்டுநில வயலைப் பார்த்ததும், உடையாருக்கு மனம் புகைந்து எரிந்தது. தான் அந்த நெல்லை வெட்டவேண்டும் என்பது தான் அவருடைய திட்டம். அது மட்டுமல்ல, கணபதியின் குடும்பத்தின் மேல் பழி தீர்க்கவும் வேண்டும். அதற்குச் சந்தர்ப்பத்தையும் பார்த்திருந்தார்.

எதற்காக?

கணபதியும் வெள்ளைச்சியும் உடையாரை ஏமாற்றி வந்தார்கள்.

வெள்ளைச்சி! அவள் மூன்று பிள்ளைகளுக்குத் தாயாகியும் அவளுடைய உடல் இளமையை இழக்க

வில்லை; கவர்ச்சி குறையவில்லை வெள்ளைச்சியின் உடலிலுள்ள நெழிவு வளைவுக் கோடுகள்! அவளுடைய மரகதச் சிரிப்பு! அவளைக் காணும்போது உடையாருடைய உடல் அனலைக் கக்கும். அவளுடைய அழகை அப்படியே கடித்து......

உடையார் சந்தர்ப்பம் பார்த்திருந்தார். இன்றைக்குப் பார்ப்போம், நாளைக்கு, அடுத்த வருடம், அடுத்த வருடம் ......"

ஒவ்வொரு வருடமும் கணபதியும் வெள்ளைச்சியும் உடையாரை ஏமாற்றி வந்தார்கள். வருடா வருடம் வெள்ளைச்சி தாயாகவேயிருந்தாள்.

கணபதியின் குடும்பத்தை அழித்துவிட வேண்டும்போலிருந்தது உடையாருக்கு. காலமும் உடையாருக்குக் கண் காட்டியது.

* * *

'கேட்டியா அண்ணை சங்கதியை?"

''என்ன?"

'குத்தகைக் காசு கொடுக்கேல்லை எண்டு, உடையார், கணவதியின்ரை நெல்லை, தான் வெட்டி எடுக்கப் போகிறாராமே?" வேதனையுடன் சொன்னான் வேலன்.

"என்ன அநியாயமிது? கேக்கப் பறைய ஆளில்லையெண்டுதானே உடையார் இப்படி எல்லாம் செய்கிறார்."

''நாங்கள் என்ன செய்யிறது? வாய் திறந்தால் நாங்களும் குடியெழும்ப வேண்டியதுதான். உடையாரிடம் பணமிருக்கு, ஆட்கள் இருக்கினம். பொலிசு, கோடு, கச்சேரி எல்லாம் அவற்றை கைக்கைதானே இருக்கு."

''அதுக்கு இப்படி அநியாயம் செய்யிறதா?'' சீனியன் வெட்டிப் பேசினான்.

''எங்களுக்கென்னத்துக்கு ஊர்த் தொல்லையை. எங்கடை பாட்டை நாங்கள் பார்ப்போம்" முருகன் அலட்சியமாகச் சொன்னான்.

''முருகா! இண்டைக்குக் கணவதிக்கு நடக்கிறதுதான் நாளைக்கு எனக்கு நடக்கும்; அடுத்த நாளைக்கு உனக்கும்...... நாங்கள் பேசாமலிருக்க இருக்கத்தான் உடையாராக்கள் எங்கடை தோளிலை ஏறி காதைக் கடிக்கிறார்கள்." ஆவேசத்துடன் கூறினான் சீனியன்.

''அப்ப நாங்கள் என்ன செய்கிறது?" ஏக்கத்துடன் கேட்டான் கந்தன்.

''ஞாயத்தைக் கேட்கிறதுதான்!"

''ஐயோ! எங்கடை வீடுகளுக்கெல்லாம் நெருப்புவைச்சு, எங்களையும் அடிச்சுச் சாக்காட்டிப் போடுவார்களே உடையாற்றை ஆட்கள்." பயத்தால் நடுங்கியது முருகனுடைய உடல்.

''நாங்கள் ஏன் தனிச்சுப்போகப் போறம்? எல்லாரும் ஒத்துமையாய் ......"

''நீ சொல்லுறது சரிதான் மச்சான். நாங்கள் எல்லாரும் ஒத்துமையாய் நிண்டால் உடையார் என்னண்டு நெல்லை வெட்டுறது? ஒருதரும் நெல்லு வெட்டப் போகாவிட்டால்......"

அவர்களெல்லோருடைய முகங்களும் செவ்வாழைப் பூப்போல மலர்ந்தன.

* * *

கணபதியினுடைய மேட்டு நில வரம்பிலே, உடையார் கையில் குடை

யுடன் கெம்பீரமாக நின்றுகொண்டிருந்தார்.

ஆண்களும் பெண்களுமாகப் பத்துப் பன்னிரண்டு பேர் கணபதியினுடைய நெல்லை வெட்டிக் கொண்டிருந்தார்கள்.

கணபதி?

அவன் உடையாருடைய பள்ள நிலத்தின் ஒரு மூலையிலே முனகிக் கொண்டு சுருண்டு கிடந்தான். அவனுடைய உடலிலே அங்குமிங்கும் ஊமைக்காயங்கள்.

உடையாருடைய பள்ள நிலத் தொங்கலிலே சில மனிதத் தலைகள் தெரிந்தன!

அலட்சியமாக நின்றார் உடையார்.

மனிதத் தலைகள் வரவரக் கூடிக் கொண்டிருந்தன.

கணபதி சிந்திய வியர்வைத்துளிகள், இரத்தச் சொட்டுகள் அவ்வளவும் மனிதர்களாக மாறிவிட்டார்களோ!

அந்த மனித மந்தைகள்;— வாழ வேண்டும் என்ற ஆவலால் உந்தப்பட்டு ஒன்றுசேர்ந்த மக்கள் ஆரவாரத்துடன் வந்துகொண்டிருந்தார்கள்; உடையாரை நோக்கி அவர்கள் வந்துகொண்டிருந்தார்கள்.

மேட்டுநிலம் சிரித்துக் கொண்டிருந்தது.

கணபதி?

அந்த மக்கள் கூட்டத்திற்கு முன் வந்துகொண்டிருக்கும் எவனோ ஒருவனுடைய தோளிலே கணபதி கிடந்தான்.

அவர்கள் உடையாரை நோக்கி பள்ள நிலத்திலிருந்து மேட்டு நிலத்தை நோக்கி ஏறிக்கொண்டிருந்தார்கள்.

எதற்காக?

நியாயம் கேட்பதற்கு! வாழ்வதற்கு!


இன்றே வாருங்கள்

## இன்ப நிலையத்திற்கு

- சுவையான சிற்றுண்டிகள், காப்பி, தேநீர் குளிர்பான வகைகள்.
- சுத்தமான திறம் நல்லெண்ணெய்
- ருசிகரமான ஊறுகாய் வகைகள்.
- ஆனந்தவிகடன், கலைச்செல்வி, ஈழநாடு, பேசும்படம் கதம்பம், இன்ப இரகசியம், கலை, இந்துநேசன், கங்கை.
- ஏராளமான துப்பறியும் நாவல்கள், மலிவுப்பதிப்புகள்.

# இன்ப நிலையம்

ஸ்டேசன் வீதி, : : சுன்னாகம்.

# தமிழ் இலக்கியத்தில்
# கம்ப இராமாயணத்திற்குள்ள இடம்

—அலெக்சாந்தர் பியதிகோர்ஸ்கி—

பாரத நாட்டின் கலை, இலக்கியம் பண்பாடு ஆகியன ரஷ்ய அறிஞர்கள் பலரைக் கவர்ந்துள்ளன. அவர்களிற் சிலர் இப்போது தமிழ் இலக்கியம் பயில்கின்றனர். அலெக்சாந்தர் பியதிகோர்ஸ்கி என்ற அறிஞர் எழுதிய இக் கட்டுரையை நமது வாசகர்கட்கு மகிழ்ச்சியுடன் அளிக்கின்றோம்.

கவிச் சக்ரவர்த்தி என்று தமிழ் அன்பர்கள் போற்றும் கம்பர், தமிழ் இலக்கிய மறுமலர்ச்சிக் காலத்துக் கவியரசர்களிலே தலைமையானவர், பெரும் பெயருக்கும் புகழுக்கும் உரியவர். தமிழ் இலக்கிய மறுமலர்ச்சி என்ற தொடரையும், இந்தக் காலப் பிரிவினைக்கு அடிப்படையாக அமைந்தகருத்தையும் இங்கே தெளிவுபடுத்துவது அவசியம். நான் கூற விரும்புவது யாதெனில், இந்த "மறுமலர்ச்சிக்கு" முற்பட்ட காலம் பல அறிஞர்களும் கூறுவதுபோல இலக்கிய நலிவுக்குரிய காலமல்ல, இலக்கியம் (அல்லது இலக்கிய உணர்வு) மதத்துடன் நெருங்கிய இணைப்புப் பெற்றிருந்த காலமாக இதைக் கொள்ளவேண்டுமே தவிர, இலக்கியச் சிதைவும் நலிவும் ஏற்பட்டிருந்த காலமாகக் கருதலாகாது. இலக்கிய சாதனைகள், கவிநயம், நடைச்சிறப்பு இவை யாவும் அன்றுமத ஈடுபாட்டை, பக்தி உணர்ச்சியைத் திறம்பட எடுத்துரைப்பதற்கான அலங்காரங்களாகக் கொள்ளப்பட்டன.

பக்தி இலக்கியமுங்கூட அடிப்படையில் உணர்ச்சிவயக் கவிதைகளால் ஆனதே. ஆனால் இது பண்டைப் பத்துப் பாட்டு, எட்டுத் தொகை நூல்களின் அகப்பொருள், புறப்பொருள் பாக்களையும், பதினெண்கீழ்க்கணக்கு நூல்களின் நீதி விளக்க, பகுத்தறிவுப் பாக்களையும் போலல்லாது, மத உள்ளடக்கமுடையதாகும். வைணவ பக்தி நெறியுடன் கம்பருக்குள்ள தொடர்புகள் கண்கூடு. வைணவராகிய அவர் திருமாலின் அவதாரமாகிய இராமனைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்டு நூல் இயற்றினர். மேலும் அவர் வைணவ பக்திநெறிக் கவிகளில் தலைமையான நம்மாழ்வாரைப் புகழ்ந்து பாமாலை புனைந்தவர்.

அதே சமயம் கம்பர் பண்டைய சைன, பௌத்த காவிய நெறியாலும், முக்கியமாக சீவகசிந்தாமணியாலும், பெரிதும் வயப்படுத்தப்பட்டார். இந்தக் காவிய நெறியைத் தொடர்ந்து வழிநடத்தியவராக ஓரளவுக்கு அவரைக் கருதலாம். ஆனால் ஓரளவுக்குத்தான்; ஏனெனில் இந்த இலக்கிய நெறி இடைக்கால மத இலக்கியத்தால் அனேகமாக புறக்கணித்து ஒதுக்கப்பட்டு விட்டது.

இந்தியக் காவிய நெறியின் தன்மை குறித்து புகழ்வாய்த்த தமிழ் அறிஞரான காலஞ்சென்ற வா. வே. சு. ஐயர் அவர்கள், வடமொழி இதிகாசங்களை அடிப்படையாகக்கொண்டு பல்வேறு இந்திய மொழிகளிலும் காவியங்கள் இயற்றப்பட்டதன் விளை

வாக இந்தியக் காவிய நெறி தோன்றியது என்றும், இதுவே இதற்கும் ஐரோப்பியக் காவிய நெறிக்குமுள்ள மாறுபாடு என்றும் கூறினர். வடமொழி மூலத்தைத் தழுவி எழுந்த இந்தக் காவியங்கள் இந்திய நாட்டின் அந்தந்தப் பகுதியின் பண்பாடு, மனப்பாங்கு, வரலாறு இவைகளுக்கு ஏற்ப மாற்றப்பட்டு புத்துரு பெறலாயின.

இவ்வாறு இந்தியாவில் இன்று எத்தனையோ பல இராமாயணங்கள் இருப்பதைக் காண்கிறோம். இவை ஒவ்வொன்றும் வால்மீகியின் இராமாயணத்துடன் ஒப்பிடத்தக்க சிறப்புடையதாகும். ஆனால் என் கருத்துப்படி இவை எல்லாவற்றிலும் கம்பரது இராமாயணமே முதன்மை நிலைக்குரியதாகும். பல நூறு ஆண்டுகளாக வடமொழி இதிகாசம் எங்கும் பரவி மக்கள் மனதிலே இடம்பெற்றதன் விளைவாக பிற்காலத்திலே தோன்றிய கம்ப இராமாயணம், துளசி இராமாயணம் முதலியவை வடமொழி மூலத்தின் பிரதேச மொழித் தழுவல்களாக அமையாது மாபெரும் கவியரசர்களின் உணர்ச்சி பூர்வ கலைப் படைப்புகளாக உருப் பெறலாயின. இந்தி இராமாயணத்தின் ஆசிரியரான துளசிதாசரையும் தெலுங்கு இராமாயணத்தின் ஆசிரியரான பாஸ்கரரையும் அம்மொழிகளில் இலக்கியத்தின் மூலவர்களாகக் கருதலாம். ஆனால் கம்பரை இவ்வாறு கருதுவதற்கில்லை. கம்பருக்கு முன்பே தமிழ்மொழி அநேகமாக இந்தியாவுக்குரிய எல்லா இலக்கிய நெறிகளிலும் தக்க வளர்ச்சிபெற்று விளங்கியது. தமிழ் இலக்கிய வரலாற்றில் கம்பர் மூன்றாவது கட்டத்தைக் குறிக்கிறார். ஆகவே கம்பரது காவியத்தில் கதை ஓட்டத்தைவிட இலக்கிய எழிலும் கலைச் சுவையும் மனப் பண்பும் தலைமையான முக்கியத்துவம் பெற்றிருப்பதில் வியப்பில்லை.

12ம் நூற்றாண்டில் தோன்றிய தமிழ் இலக்கிய மறுமலர்ச்சி சிலப்பதிகாரம், மணிமேகலை என்ற இருபெருங் காப்பியங்கள் தமிழ்க் காவிய மரபைப் பின்பற்றி மேலும் வளர்த்துச் செல்வதற்கு முயலாமல், ஏன் வடமொழி இதிகாசத்தின் வழிவந்த இராம காதை மூலமாக செயல்படவேண்டுமென்பதற்குத் திட்டவட்டமான காரணங்கள் கூறுவது கடினம். எனினும் இது குறித்து இங்கு நான் சில விபரங்களைக் குறிப்பிட விரும்புகிறேன்.

ஐம்பெருங் காப்பியங்கள்பற்றி காலம்சென்ற வையாபுரிப்பிள்ளை அவர்கள் கூறும் பிந்தியகால நிர்ணயிப்பை நாம் ஏற்பதாகவே வைத்துக்கொண்டாலுங்கூட, விருப்பு வெறுப்பின்றி ஆராயும் ஒருவர், சிலப்பதிகாரம், மணிமேகலை இவ்விரு காப்பியங்களும் மொழியின் நடையிலும் உள்ளுறை பொருளிலும் சங்க கால இலக்கியத்தை ஒத்திருப்பதை நன்கு காணலாம். சங்க இலக்கியத்தில் கடவுளின் பெயரும் கடவுள் பங்கெடுத்துக் கொள்ளும் நிகழ்ச்சிகளும் அங்கங்கே விரிவாகக் காணப்படினும், இவ்விலக்கியம் முற்றிலும் மதச்சார்பற்றது என்பது தெளிவு.

பண்டைய இந்திய நினைவுகளுக்கும் தொடர்புகளுக்குமுரிய அம்சங்களை சங்க இலக்கியத்திலே அதிகம் காண்பதற்கில்லை. அதன் உள்ளுறை பொருள் முற்றிலும் தமிழுக்கே உரியதாகும். அல்லது வையாபுரிப்பிள்ளை அவர்களும் தீட்சிதர் அவர்களும் கூறியதுபோல ஓரளவுக்கு இந்திய நாட்டின் வேறு சில பகுதிகளுக்கும் உரியதாகவும் இருக்கக்கூடும்.

சங்க இலக்கியத்தில் எழில் நிரம்பிய, தேர்ச்சியும் சிறப்பும் வாய்ந்த அரும்பெரும் கவிதை அமைப்புகள் உருவாக்கப்பட்டன. அத்துடன் கத்துவார்த்த விளக்கத்துடன் இலக்கணம் வகுக்கப்பெற்று அவை முறைப்படுத்தப்பட்டும் உள்ளன. எனவே நாம் பண்டைய சமஸ்கிருத அல்லது கிரேக்க-ரோமானிய இலக்கியத்தைப்

பற்றி பேசுவதுபோல பழம் பெரும் தமிழ் இலக்கியத்தைப் பற்றியும் வியந்து பேச முடிகிறது. பிற்காலத்திலே தோன்றிய பக்தி இலக்கியம் பண்டைத் தமிழ் இலக்கிய மரபுகளையும் முறைகளையும் கையாண்டது என்றாலுங்கூட, அது உள்ளுறைப் பொருளைப் பொறுத்தமட்டில் பண்டைத் தமிழ் மரபை அடியோடு புறக்கணித்துவிட்டது. அகப்பொருள், புறப்பொருள் பாக்களுக்குப் பதிலாக மத வழிபாடு சம்பந்தமான பக்திச் சுவைப் பாக்கள் இடம் பெறலாயின. கவிதைகள் 'ஆன்மீகத் தன்மையுடையதாகி, அறநெறிக் கருத்துக்களுக்குப் பதிலாக மதக் கருத்துக்களும் கோட்பாடுகளும் முக்கியத்துவம அடைந்தன.

பக்தி இலக்கியம் அரியாசனத்தில் அமர்ந்த காலம் முடிவுறும்வரை, அதாவது கம்பரது காலம்வரை, பண்டைத்தமிழ் இலக்கியமரபு தொடர்ந்து புறக்கணிக்கப்பட்டது. பக்தி இலக்கியக் கட்டம் கம்பரைப் பண்டைய சங்க இலக்கியத்திலிருந்து பிரித்திட்டதென்றாலுங்கூட அவரைப் பூரணமாக அதனிடமிருந்து துண்டித்து விடவில்லை. உள்ளுறைப் பொருள் பொறுத்த மட்டில்தான் அவரைச் சங்ககால மரபிலிருந்து அறவே விலகிச் செல்லுமாறு செய்தது.

தென்னகத்திலே வடமொழி இதிகாசத்தில் புது ஆர்வமும் ஊக்கமும் ஏற்பட்டு வந்த ஒரு நேரத்தில் கம்பரது காவியம் தோன்றியிருக்க வேண்டும். இராமாயணமும் பாரதமும் தமிழ் மண்ணிலே புத்துரு பெறுவதானது அன்று தமிழ்க்கலை, இலக்கிய வளர்ச்சிக்கு அவசியமானதாக இருந்திருக்க வேண்டும். ஜாதி சமயப் பூசல்களும் போராட்டமும் பொதுவாக தணிந்து விட்ட அந் நேரத்தில் இலக்கிய வளர்ச்சிக்கு பக்திநெறி ஆற்றக்கூடிய பங்குமுடிவடைந்து விட்டதால் இந்நிலை ஏற்பட்டிருக்கலாம். மதச் சார்பற்றமரபு இவ்வாறு தமிழில் திரும்பவும்தோன்றலாயிற்று. பக்திப் பாசுர மரபு புராண நூல் மரபாகவும் தத்துவார்த்தத் துறையிலே சைவ சித்தாந்தமாகவும் மாறியது.

கம்பரது இராமாயணம் வடமொழி மூலத்தின் கதை நிகழ்ச்சிகளை எடுத்தாண்ட போதிலும், முற்றிலும் தமிழுக்குரிய புதிய அறநெறிக்கும் கலையுணர்வுக்குமான சாதனமாகத் திகழ்கிறது. பண்டைய இதிகாசத்தின் கடவுள்கள், வீரர்கள் முதலியோரிடையே எழும் போராட்டம் கம்பரது காவியத்திலே மனிதனது உள்ளுறை உலகுக்கு மாற்றப்பட்டு விடுகிறது. முரண்பட்ட நோக்குகளின் போராட்டமாக, உணர்ச்சிகளின் மோதுதலாக அது மாறி விடுகிறது. ஒவ்வொரு கதைப் பாத்திரமும் இலக்கிய உருவாக அமைந்து குறிப்பிட்ட ஒரு கருத்தின், இயல்பின் இருப்பிடமாகத் திகழ்வதைக் காண்கிறோம். அது மட்டுமல்ல, நல்லது, தீயது என்பன போன்ற பண்புகளின் கலை உருவமாகத் திகழ்கின்றது. இதன் காரணமாகத்தான் நாம் பழம்பெரும் பிரஞ்சு மரபுபற்றி பேசுவது போலவே, பழம் பெரும் தமிழ் மரபு பற்றியும் பேச முடிகிறது.

ஆனால் இது கம்பரது இலக்கியப் பணியின் ஒரு அம்சத்தையே குறிக்கிறது. கம்ப ராமாயணம் தமிழ்க் கவிதையின் உயர் சிகரமாகத் திகழ்கிறது. அவரது கவிதையின் மொழி பெயர்த்திட இயலாத, ஒப்பற்கரிய இனிமையை தமிழ் அறியாதோர் சுவைத்தற்கில்லை. கம்ப இராமாயணத்தை ஐரோப்பிய மொழிகளிலே பெயர்க்கும்போது வா. வே. சு. ஐயர் செய்ததுபோல எதுகையில்லாத செய்யுள் வகைகளாக மொழி பெயர்ப்பதா, அல்லது அடிகளின் முதல் அசைகளை எதுகையுடன் அமைப்பதா, அல்லது எதுகை மோனைக்குள்ள எல்லா வாய்ப்புகளையும் சாத்தியக் கூறுகளையும் பயன்படுத்திக் கொள்வதா என்பது பற்றி

இனிமேல் தான் முடிவு செய்தாக வேண்டும்.

கம்ப இராமாயனத்திற்கே தக்க தோர் மொழி பெயர்ப்பாளர் தோன்றியாக வேண்டும். இந்தியாவில் வா. வே. சு. ஐயர், இராஜாஜி போன்றவர்களும் செக்கோஸ்லோவாகியாவில் கெமில் ஸ்வெலபிலும் தமிழ் இலக்கியத்திலிருந்து பல பாக்களை சிறந்த முறையிலே மொழி பெயர்க்க முயன்றுள்ளனர். இந்தச் சீரிய முயற்சிகள் நமக்கு நல்ல முன்னுதாரணங்களாக விளங்குகின்றன. கிழக்கு நாடுகள்பற்றிய சோவியத் ஆராய்ச்சி ஊழியர்களடகிய எங்களைப் பொறுத்தவரை, கம்ப இராமாயணத்தில் ஒரு சில பகுதிகளை யாவது மொழிபெயர்த்து எங்கள் மக்களுக்கு அறிமுகம் செய்து அதன் நற் பலன்களை எங்கள் கலாச்சாரம் பெறும் படிச் செய்வதற்கு நாங்கள் முயலுவோம் என்பதில் ஐயமில்லை.

(சோவியத் நாடு)


ஜொலிக்கும் வைரங்கள்

அழகிற் சிறந்த ஆபரணங்கள்

இவைகட்கு எம்மிடம் வாருங்கள்!

நவநாகரிக டிசைன்களில்

நகைகள் குறித்த காலத்தில்

ஓடருக்குச் செய்து கொடுக்கப்படும்

பிரகாசா ஆபரண மாளிகை,

Prop: S. ஞானப்பிரகாசம்


83, கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்.

இருபதாம் நூற்றுண்டின் இணையற்ற இலட்சிய எழுத்தாளர்

# அகிலன் அவர்கள்

—தயாரிப்பு: சி. சரவணபவன்—

அன்பை வளர்ப்பதற்கு, அன்பைப் பரப்புவதற்கு, அன்புப் பிரசாரம் செய்வதற்கு, அன்பினுலான ஓர் உலகத்தை உருவாக்
குவதற்கு அல் லும் பகலும் பாடு
படும் அன்பின் உருவம் அகிலன்
அவர்கள். சென்ற ஆண்டில் சென்
னைக்குச் சென்று என் இலட்சிய
எழுத்தாளரைச் சந்தித்து அவர்
அன்பு வெள்ளத் தில் மிதந்தேன்.
அந்தச் சிறிய வீட்டிலிருக்கும்
'சின்னஞ் சிறிய' (உருவத்தில்
தான்!) எழுத்தாள ரால் 'பென்னம்
பெரிய' (தொகை யில்) வாசகர்களி
ன் இதயங்களை எவ்வாறு, அசை
ந்து, நெகிழ்ந்து, கசிந்து, கனிந்து
போகச் செய்ய முடிகின்றது?
எவ்வாறு, ஆட் டிப் படைக்க முடி
கின்றது? என்ற வியப்பில்
எனக்கு வாய டைத்து விட்
டது. அன்றைய அவரது அன்பு விருந்தை என்னுல் மறக்கவே முடியாது.



தினகரன் தமிழ் விழாவிற்காக கொழும்பு வந்த அகிலன் அவர்கள் இலங்கையின் சரித்திரப் பிரசித்தி பெற்ற இடங்களைப் பார்த்து விட்டு யாழ்ப்பாணத்திற்கும் வருகை புரிந்தார். நீண்ட பிரயாணம் அவரைச் சற்றுக் களைப்படையச் செய்து விட்டது. ஏராளமான எழுத்தாள அன்பர்களும, **அகிலன்** அவர்களின் வாசகப் பெருமக்களும், அவர் தங்கியிருந்த இல்லத்திற்கு அடிக்கடி சென்று உரையாடிய படியால், அவரால் ஓய்வெடுக்கவே முடியவில்லை. அந்த நிலையிலும் "கலைச்செல்விக்கு ஒரு பேட்டி" என்றதும் மகிழ்ச்சியுடன் ஒப்புக்கொண்டார்; ஒன்றரை மணிநேரம் அதற்காக ஒதுக்கினுர். ஒளிவு மறைவு இன்றித் தன் கருத்துக்களைத் தெரிவித்த, இருபதாம் நூற்றுண்டின் இணையற்ற இலட்சிய எழுத்தாளர் அகிலன் அவர்கட்கும், அன்னாரின்

யாழ்ப்பாண வருகைக்கு காரணமாகவிருந்த எழுதாள நண்பர் திரு. செ. கணேசலிங்கன் அவர்கட்கும் உங்கள் எல்லோர் சார்பாகவும் "கலைச் செல்வி" சார்பாகவும் மனங்கனிந்த நன்றியைத் தெரிவிக்கின்றேன்.

இனி, அகிலன் அவர்களது ஆணித்கரமான அபிப்பிராயங்களை அன்பும் பண்பும் நிறைந்த பதில்களையும் படியுங்கள்.

---

கே. தாங்கள் எத்தனை ஆண்டுகளாக எழுத்துத் துறையில் ஈடுபட்டுள்ளீர்கள்?

ப. சென்ற 20 வருடங்களாகப் பத்திரிகையில் எழுதி வருகிறேன். அதற்கு முன் இரண்டு, மூன்று ஆண்டுகளாக கல்லூரிப் பத்திரிகையில் எழுதினேன்.

கே. எழுத்துத்துறை எவ்வாறு தங்களைக் கவர்ந்தது?

ப. என் எண்ணங்களை வெளிப்படுத்த வேண்டும்; என்பதற்காக இந்தத் துறையில் இறங்கினேன். வாசகர்களின் வரவேற்பு உற்சாகத்தைக் கொடுத்தது. ஆகவே தொடர்ந்து எழுதிவருகிறேன்.

கே. ஓர் எழுத்தாளனுக்கு முக்கியமாக என்னென்ன அம்ஸங்கள் தேவை?

ப. ரஸிகத்தன்மை, சூழ்ந்துள்ள மக்களிடம அன்பு, அம் மக்களுடைய வாழ்க்கையைக் கூர்ந்து நோக்கும் பண்பு; அதைக் கலையழகுடன் வெளியிடக்கூடிய திறமை, கவர்ச்சியான, வளமான மொழி நடை முதலியன.

கே. நல்ல எழுத்தாளனுவதற்குப் பிறமொழிப்பயிற்சி அவசியமா?

ப. ஆங்கிலமாவது தெரிந்திருப்பது நல்லது. ஆங்கில இலக்கியங்களையும். ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கப்பட்டுள்ள பிரஞ்ச், ரஷ்ய இலக்கியங்களையும் படிப்பதால் எழுத்தாளர்கள் பயனடைவார்கள்.

கே. எழுத்துலகில் தங்கள் குருவாக யாரைக் கருதுகின்றீர்கள்?

ப. குருவென்று தனியாக எவரையும் கொள்ளவில்லை. கதைகள் படிப்பதில் எனக்கு எப்போதுமே ஓர் ஆசை. புதுமைப் பித்தன், கு. ப. ரா, கல்கி ஆகியோரின் எழுத்துக்களை ஆவலுடன் படிப்பேன். புதுமைப்பித்தன் அவர்களின் எழுத்தில் வலிமை அதிக முண்டு. கூடவே ஒரு 'முரட்டுப் போக்கும் உண்டு. கு. ப. ரா. அவர்களின் கதைகளிலுள்ள இங்கிதமும் ஜிலு ஜிலுப்பும் என்னைக் கவர்ந்தன. சிக்கலான விஷயங்களையும் வாசகர்கட்குப் புரியும்படியாக எழுதினர் கல்கி அவர்கள் ஆகவே புதுமைப் பித்தனின் வலிமை, கு. ப. ரா வின் அழகு, கல்கியின் எளிமை ஆகிய மூன்றும் சேர்ந்த ஒரு புதிய நடையை நான் கையாண்டேன். அம் மூவருடைய வெற்றியும் தோல்வியும் எனக்குப் பெருமளவில் உதவின.

கே. தாங்கள் இதுவரை எழுதிய சிறுகதைகள் எத்தனை? நாவல்கள் எத்தனை.

ப. 100க்கு மேற்பட்ட சிறுகதைகளும் ஏழு, எட்டு நாவல்களும் எழுதியுள்ளேன்.

கே. தாங்கள் கவிதைகள் எது வுமே எழுதவில்லையா?

ப. குறிப்படக்கூடியதாக எதுவுமில்லை. கதைகளில் சில சந்தர்ப்பங்களில் வரும் சிறுகவிதைகளை நானே எழுதினேன்.

கே. தாங்கள் எப்படி எழுதுகின்றீர்கள்?—குறிப்பிட்ட ஒரு கருத்தை விளக்கவேண்டும் என்று திட்டமிட்டு எழுதுகின்றீர்களா? அல்லது, உணர்ச்சி வேகத்தில் 'ஏதாவது எழுதிடவேண்டும்' என்பதற்காக எழுதுகின்றீர்களா?

ப. நல்ல கருத்துக்களை விளக்க வேண்டும் எனத் திட்டமிட்டே எழுதுகின்றேன்.

கே. "கடைசி ஆசை" என்ற கதையை ஏன் எழுதினீர்கள்?

ப. அந்தக் கதையின் கதாநாயகி ஒரு விதவை. வாழ்க்கையில் இன்பம் என்றால் என்ன என்பதைப் பள்ளி ஆசிரியரின் வருகையின் பின்தான் உணர்ந்து கொண்டாள். சமுதாய நியதியின் படி அவள் அந்த இன்பத்தை அடைய முடியாது. ஆசையை நீண்டநாள் வைத்துக் கொண்டுதுன்பப்படுவதைவிட ஒரு தடவை அதை அனுபவித்துக் கொண்டு உடனேயே இறந்துவிடுவதே மேல் என்ற முடிவிற்கு வந்த அவள், பள்ளிஆசிரியருடன் 'வாழ்கின்றாள்'. துர்ப்பாக்கியசாலிகளான சில பெண்களின் மனநிலையைத் தெரியவைப்பதற்காகவே இதை எழுதினேன்.

கே. தங்கள் கதைகளில் காதலுக்கு ஏன் அதிக முக்கியத்துவம் கொடுக்கின்றீர்கள்?

ப. காதல் என்றைக்குமே ஒரு நல்ல உணர்ச்சி; புனிதமான, அழகான ஓர் உணர்ச்சி. காதலை நான் நம்புகிறேன். உலகத்திலுள்ள வேற்றுமைகளையெல்லாம் அதனால் ஒழிக்க முடியுமென நினைக்கிறேன். இதைச் சரியான முறையில் உபயோகப்படுத்த வேண்டும். கம்பனும், இளங்கோவும், வேறு பல புலவர்களும் காதலையே கையாண்டுள்ளார்கள். ஆகவே நான் மட்டும் புதிதாக அதை உபயோகிக்கின்றேனெனக் குற்றம் சாட்டக் கூடாது.

கே. "பாவை விளக்கு" நாவலில் தணிகாசலத்திற்கும் உமாவிற்குமுள்ள தொடர்பு சற்று 'அதிகமாகி' விட்டது என்று நினைக்கின்றேன். தங்கள் கருத்து?

ப. தனிப்பட்ட குண விசேஷங்களையுடைய பாத்திரங்களைக்கொண்டு தான் இலக்கியங்கள் உருவாகின்றன. அப்படியான ஒரு பாத்திரம் தான் உமா. உமாவின் போக்கு உலகிலுள்ள எல்லோருக்குமே பொருந்தாது. ஆனால் ஒரு சிலர்—பெண்கள் அப்படி இருக்கின்றார்கள். அதை நான் நம்புகிறேன். ஆகவே அந்தப் பாத்திரத்தைப் படைத்தேன்.

கே. உமாவைச் சாகடியாது விட்டிருக்கக் கூடாதா?

ப. உமாவைச் சாகடித்தது இலக்கிய நியதி. வாழ்விற்கும் இலக்கியத்திற்குமுள்ள வேறுபாடு அங்கேதான் உண்டு.

கே. கதையமைப்பு, கட்டுக்கோப்பு, கருத்து–ஆகியவற்றில் "பாவை விளக்கி"லும் பார்க்க "சிநேகிதி" சிறந்தது என்பது என் கருத்து. தாங்கள் என்ன நினைக்கிறீர்கள்?

ப. இது உங்கள் கருத்து என்று சொல்லும் போது அதைப் பற்றி நான் ஒன்றும் சொல்வதற்கில்லை. ஆனால் என் "சினேகிதி" சிறிய நாவல். மேலை நாட்டு இலக்கியங்களைப் படித்தபிறகு, நாவல், பாத்திரப் படைப்பு ஆகியவற்றைப் பற்றித்

திட்டவட்டமாகத் தெரிந்துகொண்டு, தனிப்பட்ட குண விசேஷங்களையு டைய சிலபாத்திரங்களைப்(Character) படைக்கவேண்டும் என்ற ஆவலு டன் எழுதப்பட்ட பெரிய நாவல் "பாவை விளக்கு."

கே. "பாவை விளக்கு" படத்திற் குத் தாங்கள் ஏன் வசனம் எழுத வில்லை?

ப. திரையுலக அனுபவம் இல் லாததால். ஆனால் "வேங்கையின் மைந்த"னுக்குப் பிறகு நானே என் கதைகளுக்கு வசனம் எழுதுவேன்.

கே. இதுவரை எந்தத் தமிழ் நூலுக்கும் "நோபல் பரிசு" கிடைக்க வில்லை. அந்தப் பரிசைப் பெறவேண் டும் என்ற விருப்பம் தங்களுக்கு இல்லையா?

ப. நோபல் பரிசல்ல, வேறு எந் தப் பரிசைப் பற்றியும் எனக்கு அக் கறையில்லை. பரிசுக்காகவோ, பாராட் டிற்காகவோ எழுத்தாளன் எழுது வது கூடாது. நான் எழுதுவதில்லை.

கே. ஏதாவது எழுத வேண்டு மென்றால் டாக்டர் மு. வ. அவர்கள் கிராமத்திற்குச் சென்றே எழுதுவா ராம். தாங்கள்?

ப. எந்த இடமென்றாலும் சரி, தனிமை, காப்பி-இந்த இரண்டும் இருந்தால் எனக்குப் போதும்.

கே. டாக்டர் மு. வ. அவர்களின் நாவல்களைப்பற்றிய தங்கள் கருத்து என்ன?

ப. நல்ல கருத்துள்ள கதைகள் அவை.

கே. 'கலை, கலைக்காகவே' என் பது பற்றிய தங்கள் கருத்து என்ன?

ப. அந்த வாதம் இப்போது செத் துவிட்டது.

கே. மனிதனுடைய எல்லாப் பிரச்சனைகளையும் வைத்து எத்தனை யோ இலட்சம் கதைகள் எழுதப் பட்டுவிட்டன. இப்போது வெளியா கும் கதைகளில் முதல் இரு பந்தி களையும் படித்தாலே, கதையின் முடிவு தெரிந்துவிடும். ஆகவே இன் னும் சில ஆண்டுகளில் சிறுகதை கட்கு வரவேற்பே இருக்காது என நான் நினைக்கிறேன். தாங்கள் என்ன நினைக்கின்றீர்கள்?

ப. ஒவ்வொரு மனிதனையும் வைத் துக் கொண்டே எத்தனையோ நல்ல கதைகள் எழுதி விடலாம்-கதாசிரி யன் வல்லவனாக இருந்தால்.

கே. "முற்போக்கு இலக்கியம்" என்று இலக்கியத்தில் தனியான பிரிவு இருக்கின்றது என்பதை ஏற் றுக் கொள்கின்றீர்களா?

ப. இலக்கியம் என்பது வாழ்வின் முற்போக்குக்காகத்தான் இருக்கின் றது. ஆகவே அதிலே முற்போக்கு இலக்கியம் என்ற தனிப்பிரிவு தேவை யில்லை.

கே. சென்னைத் தமிழ் எழுத்தா ளர் சங்கத்தில் ஏற்பட்டுள்ள பிளவு பற்றி ஏதாவது கூறமுடியுமா?

ப. தேர்தல் நடைபெறுவதற்கு முன்பே, 'தோற்றுப்போனால் புதிய சங்கம் அமைக்க வேண்டும்' என விரும்பியவர்கள் இப்போது மற்றச் சங்கத்தை ஆரம்பித்திருக்கின்றார்கள்.

கே. கட்டப்பொம்மன் ஆராய்ச்சி பற்றித் தாங்கள் என்ன கருதுகின் றீர்கள்?

ப. தமிழ்நாட்டுக் கிராமிய மக்களாற்கூட ஒரு மாபெரும் வீரன் என்று ஒப்புக்கொள்ளப் பட்டவன் கட்டப்பொம்மன். கட்டப்பொம்மன் தெருக்கூத்து தமிழ் நாடு முழுவதும் பரவி மக்களின் பேராதரவைப் பெற்றதிலிருந்தே அவன் மக்களின் மதிப்பிற்கும் பெருமைக்கும் பாத்திரமானவன் என்பது தெளிவு. கட்டப்பொம்மனைப் பற்றி இரண்டு கருத்துக்கள் இருப்பதற்கே இடமில்லை.

கே. எழுத்துத் துறையில் தங்களுக்கு ஏற்பட்ட மறக்கமுடியாத சம்பவம் ஏதேனும் உண்டா?

ப. வாழ்க்கையில் மறக்கமுடியாத சம்பவங்களை மறப்பதற்காகத்தான் கதைகளை எழுத ஆரம்பித்தேன். என் கதைகளில் எந்தெந்தச் சம்பவங்களை உங்களால் மறக்க முடியவில்லையோ அவற்றையெல்லாம் என் மறக்கமுடியாத சம்பவங்களாக எடுத்துக் கொள்ளுங்கள்!

கே. "கலைச்செல்வி" மூலம் இலங்கையிலுள்ள தங்கள் ரஸிகர்களுக்கும் எழுத்தாளர்களுக்கும் தாங்கள் என்ன கூற விரும்புகின்றீர்கள்?

ப. ரஸிகர்களுக்கு: உங்கள் எல்லோரையுமே பார்க்க விரும்பினேன். அவசரத்தில் வந்தபடியால் ஒரு சிலரைத்தான் பார்க்க முடிந்தது. எல்லோரையும் பார்க்க முடியாததற்காக மன்னிப்புக் கோருகிறேன். இன்னொருதடவை உங்களைப் பார்ப்பதற்காகவே நிச்சயம் வருவேன்.

ப. எழுத்தாளர்களுக்கு ஒரு புதிய விழிப்பையும் ஒற்றுமை உணர்ச்சியையும் இங்குள்ள இளம் எழுத்தாளர்களிடையே காண்கின்றேன். ஏற்கனவே அனுபவம் பெற்ற எழுத்தாளர்களுடன் அவர்கள் தொடர்பு கொண்டு, தம் எழுத்து மூலம் இந்நாட்டு மக்களுக்கு ஒரு புதிய சக்தியும் உற்சாகமும் கொடுக்கும்படி கேட்டுக் கொள்கிறேன். இந்நாட்டின் அடிப்படைப் பிரச்சினைகளை வைத்துக்கொண்டு மக்களுக்கு நம்பிக்கை ஏற்படுத்துவதற்கு அவர்கள் எழுதவேண்டும். ஒற்றுமைதான் நமது அடிப்படைத்தேவை.

வணக்கம்.

* * *


# கலைச்செல்வி

தனிப்பிரதி : 25சதம்

ஆண்டுச் சந்தா : ரூபா 4-00
(மலருடன்)

சந்தாப் பணம் அனுப்பவேண்டிய முகவரி:-

**கலைச்செல்வி.**

யாழ் - தமிழ் இலக்கிய மன்றம்

கந்தரோடை : : சுன்னாகம்.

அச்சேருத அருங்கவிதைகள் :

# கனகி புராணத்தில் சிலபாடல்கள்

— கனக. செந்திநாதன் —

கல்லும் முள்ளும் பற்றையும் நிறைந்த ஒரு கட்டாந்தரையிலே கட்டப்பட்டிருக்கிறது ஒரு மாடு. இளங்காளை. 'கொம்புக்கு மண்' எடுக்கிற பருவம். வண்டியிற் பூட்டிப் பழக் காததால் முறுகி வளர்ந்த உடல். எதைக் கண்டாலும் வெருட்சி கட்டை அடித்து இறுக்கிக் கட்டப்பட்டிருந்தது என்று நினைத்து விடாதீர்கள். ஒரு ஓட்டைக் கல்லில்-பெரிய கல்லில்- அது கட்டப் பட்டிருந்தது. முக்கி முனகி இழுத்துக்கொண்டு போய்த்தான் அது மேய்ந்து கொண்டிருந்தது.

அப்போது அதன் கண்ணுக்கு ஏதோ கறுப்பாகத் தெரிந்தது. உற்றுப் பார்த்தது. அந்த உருவம் சற்றுப் பெரிதாய்-மிகப் பெரிதாய் தனக்குக் கிட்ட வருவதைக் கண்டது. வெருண்டு ஓடத் தொடங்கியது. வாலைக் கிளப்பிக்கொண்டோடியது. அந்தப் பெரிய கல்லையும் இழுத்துக்கொண்டு பறட்டைக் காடு முழுவதும் ஓடியது. கயிற்றில் கட்டப்பட்டகல் மற்றக்கற்களோடு மோதி, பந்து போல் துள்ளியது. இந்தக் காட்சியை ஒருவர் அநுபவித்தார். அவர் ஒரு புலவர். மக்கள் கவி. அவரைக் கண்டு-அவர் கொண்டு வந்த குடையைக் கண்டு 'முடிமிசை வெயில்படாமல் பிடித்து வந்த கறுப்புக் குடையைக் கண்டுதான் காளைமாடுவெருண்டது. அவர் வாயிலிருந்து இந்தக் காட்சி கவிதையாக வெளி வந்தது.

> "புல்லை மேய்ந்தங்கு நின்ற திமிர் புரி இடபக் கன்று
> முல்லை சார் வழியதாக முடிமிசை குடைகைக் கொண்டு
> செல்லுவோர் தம்மைக் கண்டு சினந்து வாலெடுத்து மூசிக்
> கல்லையும் கயிற்றினேடு கானிடை இழுத்துச் செல்லும்"

இந்தத் 'திமிர்புரி இடபக் கன்று,' சினந்து வாலெடுத்து மூசிக் கல்லையும் கயிற்றினேடு இழுத்துச்செல்லும் காட்சியைப் பாடியவர் **ஈழத்துச் சுப்பையாப் புலவர்**. அவர் பாடிய நூல் கனகி புராணம்.

வண்ணார் பண்ணைச் சிவன் கோவில் தாசிகளில் ஒருத்தியாகிய **கனகி** என்பவள் மீது, வண்ணார்பண்ணை மேளக்காரப் பகுதியைச் சேர்ந்த இப்புலவரால் பாடப்பட்டது கனகி புராணம். கனகி சுயம் வரம் என்றும் இந்நூல் அழைக்கப்படும். இந்நூல் நானூறு விருத்தங்களால் ஆயதென்றும் அவை பாரத காவியம் திரௌபதி மாலையிட்ட சருக்கம் போன்ற விருத்தங்களைப் போன்றவை என்றும் பாவலர் சரித்திரதீபக ஆசிரியர் கூறுகிறார்.

இந் நூலில் தமக்குக் கிடைத்த முப்பத்தைந்து பாடல்களை, யாழ்ப்பாணத்து நவாலியூர், ஸ்ரீ சி. **கந்தையாபிள்ளையவர்கள்** 1937ம் ஆண்டு ஓர் அரிய முகவுரையோடு வெளியிட்டார்கள். அப்புத்தகத்திலுள்ள 'புல்லைமேய்ந்தங்குநின்ற' என்ற இந்தப் பாடலை, 'முல்லைக்காட்சி' என்ற பெயரிட்டுப் பிரபல எழுத்தாளர் **ச. பஞ்சாட்சரசர்மா** அவர்கள் **மறுமலர்ச்சிப்** பத்திரிகையிலே பதினைந்து வருடங்கட்கு முன் விமர்சனம் செய்த போதுதான் இரசிக உலகம் அந்நூலைப்பற்றி அறிய அவாக்கொண்டது. அந்நூலிலுள்ள 'நீர்பெருக்கெடுத்தாலே,' 'தாலக்கனி ஒன்றினுக்காக' என்ற வர்ணனைப் பாடல்கள் சுவை நிறைந்தனவாகக் காணப்பட்டு இலக்கிய நூற்றெகுதிகளிலும் இடம் பெற்றன.

**தினகரன்**பத்திரிகையிலே பிரபல தமிழ்நாட்டுஎழுத்தாளர் **சிதம்பர ரகுநாதன்** அவர்கள் '**பஞ்சகாவியம்**' என்ற நூலை அறிமுகம் செய்து விமர்சனம் எழுதி வருகையில் அதுபோன்ற 'மக்கள்காவியம்' ஏதாவது ஈழத்திலும் இருந்தனவா? என்ற கேள்வி என்மனதில் எழுந்தது. வயது சென்ற பெரியோர்கள் பலரை உசாவினேன். இந்தக் 'கனகி புராணம்' என்பதைக் குறிப்பிட்டு பலர் பேசினார்கள். சிலர் வாய்முறையாகப் பாடம் செய்த சில பாடல்களைக் கூறினார்கள். 'கஞ்சன் காவியம்,' 'கோட்டுப்புராணம்' (நீதிஸ்தலம் சம்பந்தமான வேடிக்கைப்பாக்கள்) என்பன பற்றிப் பேசியோரும் உண்டு.

இந்தக் கனகி புராணம் சம்பந்தமாக உடன் ஆசிரியர் ஒருவரோடு பேசுகையில் தம்மிடம் ஒரு கொப்பி இருப்பதாகக் கூறவே என் மகிழ்ச்சி எல்லை கடந்து விட்டது. உடனே அதைத் தேடி ஆராய்ந்து பார்க்கையில் அவை புத்தகத்தில் உள்ள பாடல்களாகப் பலவும், இல்லாதன்வாகச் சிலவும் இருந்தன.

அச்சேறிய கனகி புராணத்திலுள்ள பாடல்களைப்பற்றியோ, இந்தப் பாடல்களிலுள்ள நயங்களைப்பற்றியோ விமர்சனம் செய்வதை இன்னொரு சமயத்துக்கு வைத்துக்கொண்டு அந்தப்பாடல்களை அப்படியே உங்கள் முன் சமர்ப்பிக்கிறேன். இப்படியான பாடல்கள் தெரிந்தவர்கள், தமிழ்த்தாயின் பழமையைப் போற்றுபவர்கள், அவளின் பலவகை அணிகளை அறிய ஆசைப்படும் இரசிகர்களுக்காக வெளிப்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

புத்தகத்திலுள்ள பாடல் தொகை 35. அதில் இல்லாதபாடல்கள் இவை. அவற்றின் தொகை 13

கனகியைக் கண்டு பரவசமுற்ற காளை ஒருவன் நெஞ்சொடு சாற்றல்

கன்னங் கருங்குயில் வல்லிதன் மார்பிற் கதித் தெழுந்து
தென்னங் குரும்பையின் சாயல் கண்டீர் திரண்டோடி விம்மி
பொன்னங் கலசங்கள் போலே இருந்த நற் பூந்தனங்கள்
இன்னந் தளர்ந்திடு மென்றே மனங் கிடந்தேங்குவதே. (1)

சுயம் வரப் படலம்

மானைக் கயலை வேல் வாளை மறு நீர்க் கயலைக் குவளையை நற்
கானிற் கமலத்தினை வெல்லும் கண்ணாய்! கனகே!! இவணிருப்போன்
ஞானக் குணமும் நல்லறிவும் நலஞ்சேர் புகழும் மிகவுடையோன்
ஆனைக் கோட்டை வேளாளன் ஆறுமுகன் காண் சேயிழையே. (2)

கனத்துப் புடைத்துப் பருத்து விம்மும் கதிர்பூண்முலையாய்! கனகமின்னே!!
மனத்துக் கிசைந்த மணவாளன் இவன் காண் இந்த மகிதலத்தில்
தனத்துக் கிவனே சரச மொழி தனக்கு மிவனே தான் கொள்ளும்
சினத்துக் கிவனே திருமலை சின்னையனிவன் காண் சேயிழையே (3)

செப்பைப் பழித்துக் கலசத்தைச் சிரித்துக் தெங்கினிளநீரை
ஒப்புக் கொடுக்கும் தனக் கனகே! உன்னைப் புணரும் அவாவுடனே
எப்ப வெனினும் உனதேவல் எங்கேயென்று திரியுமிவன்
சுப்ர மண்யன் பெற்றெடுத்த சுகுணனிவன் காண் சுரிகுழலே. (4)

வண்டார் மாலைக் குழலாளே! மதிசேர்ந்தனைய முகத்தாளே!!
கண்டார் வணங்குங் கண்ணாளே!! கனகென் றுரைக்குங் காரிகையே!!
உண்டார் போகம் இவரைப்போல் உளரோ இந்த ஊர்தனிலே
நண்டார் புனையும் பண்டாரம் என்றார் அந்தத் தாதியரே. (5)

மறுவற் றிலங்கு மதிமுகத்தில் வாள் சேர்ந்தனைய வுன்கண்ணும்
நிறையச் சொருகும் பூங்குழற்கு நிகர் வேறில்லாக் கனகமின்னே !
அறிவுக் கிவன்தான் அவனிதனில் ஆர்க்குமுதவி செயவிரும்பும்
கறுவல் தம்பியெனும் பெயரோன் கன்னன்தனக்குச் சரியாமே. (6)

கொஞ்சிக் கடிக்கச் செங்கனிவாய் கொடுக்கும் பெண்ணே! கனகமின்னே!!
கஞ்சிக் கிட்ட பயறளவும் கனவில் ஒரு மெய் கண்டறியான்
கிஞ்சில் தனமும் குத்தரமும் கேடும் நிறைந்த மனமுடையோன்
வஞ்சக் கொடியோன் பெரியதம்பி வரத்தால் வந்தவதரித்தோனே. (7)

பொன்னைப் பொருவும் மருமத்தின் புடைகொண்டெழுந்த வளமுலையாய் !
மின்னைப் பழிக்கும் நுண்ணிடையாய் வேய்த்தோட் கனகே!! இவணிருப்
[போன்
தன்னைப்போல வேறெவர் இத்தரணித் தலத்தில் உளரென்று
எண்ணம் பேசும் நன்னி இவன் இடத்துப்பூச்சு மெய்யானே. (8)

தாமரை குமுதம் மலையுடன் அகிலும் தண்முகம் வாய்தனங் கூந்த
லாமென உவமை படைத்திடு கனகே! அனநடைவாய் மொழிக்குயிலே!!
பாமரு மாலை பாடிடவல்லோன் பகர்ந்திடு மதனநூல் படித்தோன்
காமரு கோப்பாய் உறையு மூத்தப்பு கன்னி நீ காணுதி யென்றான். (9)

### கனகி மாலை சூட்டியதைக் கண்டு வணிக மைந்தர் சிலர் வேற்றுமை கொள்ளல்

அங்கவர் சூடும் மாலையே காலை ஆதவன் போல மற்றங்கு
தங்கிய வணிகர் சிறார்முக மெல்லாந் தடவரைக் குவளையே போன்ற
பங்கமே நமக்குக் கிடைத்த தென்றெண்ணிப் பாதகிதனக்கு நாமிப்போ
எங்கெதைச் செய்வோம் என்று கொண்டெண்ணி ஏங்கினர் இதயமும்
வேறாய். (10)

நன்னி சின்னையனோடே நளங்கிள ருடுவிலானும்
கன்னனே யனையகாசி நாதர்தங் காளைதானும்
இன்னிவர் நால்வரோடே ஏற்றிளஞ் சிங்கமென்னப்
பன்னகம் போலச் சீறிப்பதைத்தனர் வணிக மைந்தர். (11)

நன்னியர் உறியறுத்தார் நடுவிலார் பூண்டுகொண்டார்
சின்னியோ டொன்றி விட்டார் செங்கை யொன்றில்லாச்சொத்தி
முன்னுளோர் கதையைக் கேட்டு முத்தரும் அகஞ் சலித்தார்
நன்னிய கனகி பாடும் நடுராசி யாச்சுதன்றே. (12)

நட்டுவன் ஒருவனாலே நாடக சாலை வந்தாள்
செட்டியில் ஒருவன் பட்டான் சேணியர் இருவர் பட்டார்
மட்டுவில் குருக்கள் பட்டார் கொக்குவிற் சுப்பன் பட்டான்
மட்டிகள் இவரைப் போலப் பட்டவர் பலபேர் அந்தோ ! (13)

# தற்கொலை!

[கா. வேழவேந்தன்]

இரவு மணி பன்னிரண்டுக்குமேல் ஆகிறது. அதோ அந்த வீட்டில் இன்னும் விளக்கு எரிந்து கொண்டே இருக்கிறது. விசாலமான அந்த மாளிகையில் வசிப்பது ஒரே ஒரு ஜீவன் தான்! அந்த முதியவரும் இன்னும் கொட்டக் கொட்ட விழித்துக் கொண்டிருக்கிருன். அவள் விழிகள் கண்ணீரை அருவியாகப் பெருக்கிக் கொண்டே இருக்கின்றன. ஏதோ பிரமை பிடித்தவள் போல ஒரே திக்கில் பார்த்துக் கொண்டிருக்கிருள். அவளைக் கவ்வியிருக்கும் அந்த முகங்களை மீண்டும் காண முடியாதே!

மேலும் மேலும் அந்தப் படத்தைப் பார்த்துக் கொண்டிருக்க அவளால் முடியவில்லை அதைச் சுவற்றிலிருந்து கழட்டினுள். அப்படியே மார்போடு அணைத்துக் கொண்டாள் அவளுடைய கண்கள் தானுக மூடிக் கொண்டன. ஆனல் இமைகளிலிருந்து உதிர்ந்த கண்ணீர்த்துளிகள் அந்தப் படத்தின்மேல் விழுந்து சிதறின. அவள் தன் முந்தானை

ஆசையோடு பாசம் வைத்து அருமையாக வளர்த்த அன்னையை அலற வைத்து விட்டு எங்கே சென்ருர்கள் அவளுடைய பிள்ளைகள்? கண்ணின் மணி எனக் கருதியவளை ஏன் எண்ணி எண்ணி ஏங்கவைத்தார்கள்?—காரணத்தைக் கதையாகக் கூறும் கா. வேழவேந்தன் அவர்கள் சென்னை பச்சையப்பன் கல்லூரியைச் சேர்ந்தவர். தி. மு. க. பத்திரிகைகளில் அடிக்கடி எழுதிவருகின்ருர்.

அந்த வேதனை நோய் கொஞ்சம் கொஞ்சமாக அவளைக் கொன்று வருகிறது இதே நிலையில் அவள் இருந்தால் இன்னும் ஓரிரு நாட்களில் அவளுடைய ஆவியும் அவளை விட்டுப் பிரிந்து விடும். பிறகு அந்த அழகு மாளிகையிலே மயான அமைதிதான் நிலவும்!

மீண்டும் அவள் சுவற்றில் தலைக்குமேல் மாட்டப் பட்டிருந்த படத்தைப் பார்த்தாள். அதிலே, அவள் பெற்றெடுத்த மூன்று செல்வங்களும் சிரித்த முகத்துடன் அவளைப் பார்த்துக் கொண்டிருந்தார்கள். அவர்களின் அந்தப் புன்னகை ஒளிரும் முகங்கள் அவளுக்கு மேலும் சொல்லொணுத துயரத்தைத்தான் தந்திருக்க வேண்டும். காரணம் அவள் யால் ஒருமுறை படத்தைத் துடைத்தாள்.

பிறகு படத்தில் ஒவ்வொரு உருவத்தையும் கூர்ந்து நோக்கத் தொடங்கினுள். அவள் ஒரு ஓரத்தில் நின்று கொண்டிருந்த அவளுடைய கடைசி மகள் வைரத்தை உற்று நோக்கினுள்.

“அம்மா! வைரம்! எப்படியெல்லாம் எங்களுடன் வாழ்ந்தாய்! என் தங்கமே! ஏனம்மா எங்களை விட்டுப் போய் விட்டாய்! ஐயோ! நான் எப்படித் தாங்குவேன்; எப்படி வாழ்வேன்?” இந்தச்சொற்களைச் சொல்லும் போது அவளுடைய விழிகளிலே துளிர்த்த நீர் படத்திலே இருந்த வைரத்தின் உருவத்தை மங்கலாக்கிக்

"தாயே! நீங்கள் ஏனம்மா வருந்த வேண்டும்? நான் மிக மிக அற்பமானவள்! அதிலும் பெண் ஜென்மம்! நான்தானா நம் குடும்பத்தைப் பாதுகாக்கப் போகிறேன்? ஆகவே நான் உங்களை விட்டுப் பிரிந்தது நல்லது என்றே எண்ணுங்கள் அம்மா! ஆனால், 'இதற்காகவா உன்னை வளர்த்து ஆளாக்கினோம், திடீரென்று உலகத்திலிருந்தே மறைந்து விட்டாயே, பாவி!' என்று உங்கள் மேலான இதயம் என்னைத் திட்டும்.

நான் என்னம்மா செய்வேன்? பிரியவேண்டிய கட்டாய நிலை ஏற்பட்டு விட்டதே! நானும் கூடத் தான் நல்ல ஒரு கணவனை அடைந்து இன்பமுடன் வாழவேண்டும்; 'தாய்மை'யின் சிறப்பைப் பெற்றுப் பெருமையடைய வேண்டும் என்றெல்லாம் மனக்கோட்டை கட்டியிருந்தேன். நான் படிக்கும் நூல்களில் வரும் கதா நாயகனின் குணங்களையெல்லாம் சீர்தூக்கிப் பார்த்து இப்படிப் பட்டவன்தான் மணவாளனாக வாய்க்க வேண்டும் என்றெல்லாம் எண்ண மாளிகை எழுப்பியிருந்தேன்.

ஆனால் அந்த மாளிகை தூள் தூளாகச் சிதறிப் போகும் என்று யாரம்மா எதிர்பார்த்தார்கள்? பொன் குடத்தை ஆணுக்கும் மண்குடத்தை பெண்ணுக்கும் உவமையாக்கிக் காட்டியிருந்தார் ஒருகதாசிரியர். பொன் குடம் கைதவறி நொறுங்கினாலும் அதைக் கொண்டு வேறு குடம் செய்து கொள்ளலாம்; ஆனால் மண் குடம்... உடைந்தது உடைந்தது தான்; மீண்டும் பயனில்லை என்பது இந்த ஆசிரியரின் வாதம்! உண்மை தானம்மா அது! என்வாழ்வையே எடுத்துக் கொள்ளுங்களேன். நான் சாகும் நாள் வரை எப்படியெல்லாம்

பிறந்தவர்களுக்குள்ளேயே நான் தான் அதிகமான இன்பத்தை துய்க்கப் பிறந்தவள் என்று எண்ணினேன்! அதற்கு எவ்விதக் குறையுமில்லாமல்தான் வளர்த்து விட்டீர்கள், பள்ளிக்கு அனுப்பினீர்கள், பட்டுத் துணிகளையும் பரவசம் தரும் ஆடைகளையும் கட்டுக் கட்டாக வாங்கிக் கொடுத்தீர்கள்; பகட்டான அணிமணிகளுக்கும் நீங்கள் குறையே வைக்கவில்லை. அடுக்காக எல்லாம் செய்தீர்கள்! நானும் இந்த உலகத்தில் 'வறுமை' என்பதின் பொருளையே அறியாத சூழ்நிலையில் வளர்ந்து பெரியவளானேன்!

ஆனால்....

சிங்காரமாகச் சிறகடித்துப்பறக்கும் பச்சைக்கிளி, வேடனின் அம்பு தன்னை நெருங்கும் வரைக்கும் துன்பத்தையறியாமல்தான் இருக்கிறது! கூட்டுக்குள் அடைந்து கிடக்கும் பட்டுப்புழு, சுடுநீரில் போடும்வரையில் தன்னையே மறந்து இன்ப நினைவில் ஆழ்ந்து கிடக்கிறது! அது போலவே தான் என் வாழ்வென்னும் பனை மரத்திற்கு ஓர் இடியாக அந்தப்பாவி வாய்க்கும்வரை நான் என் மகிழ்ச்சி உலகத்திற்குள் சுற்றிச்சுற்றி வலம் வந்தேன்!

இந்த வையகத்திலே பெண்கள் கெடுவதற்கு அவர்களும்தான் உடந்தையாக இருக்கிறார்கள் என்று சில எழுத்தாளர்கள் வரட்டுக் கூச்சல் போடுகிறார்கள்! அது உண்மையானால், இந்த அக்கிரமம் நடப்பதற்கு நான் கொஞ்சமும் உதவிசெய்யவில்லையே அம்மா! நான் குறிப்பிட்டபடி திடீரென்று விழுந்த பேரிடி தான் இது! என்னையே கொள்ளைகொண்டு போய்விட்டது.

அன்றுவரை ஆனந்தன் யார், நம் குடும்பத்துக்கும் அவனுக்கும் என்ன உறவு என்பதுகூட எனக்கு நிச்சயமாகத் தெரியாது அம்மா!

கச்சேரிக்குப் போவதாகக்கூட இல்லை. நம் சின்ன அண்ணா செல்வம்தான் தொந்தரவு செய்து அழைத்துச் சென்றார். இருவரும் முதல் வகுப்பில் இருந்த இருக்கைகளில் அமர்ந்தோம். நடனம் தொடங்கவில்லை 'அப்போதுதான் அந்தப் பாதகன் புன்னகையைத் தவழவிட்டுக் கொண்டு எங்களருகில் வந்தான். செல்வமண்ணாதான் அவனிடம் பேசத்தொடங்கினார். இருவரும் நண்பர்களாம்! நான் அவர்கள் பேச்சைக் கவனிக்காமல் இசைத்தட்டுகளில் மெல்லிய ஊசிகள் முத்தமிடுவதால் ஏற்படும் இனிய நாதத்தைக் கேட்டுக் கொண்டிருந்தேன். அண்ணாவின் பக்கத்திலே அமர்ந்து கொண்டான் அவன். எனக்கேகூட எரிச்சலாக இருந்தது. அண்ணா நம்முடன் நகைச்சுவையாக ஏதேனும் பேசிக் கொண்டிருப்பாரே, இவன் வேறு வந்து தொலைத்தானே என்று மனதிற்குள் எண்ணிப் புழுங்கினேன்.

ஒவ்வொரு பகுதியாக நடனம் நடந்து கொண்டிருந்தது. இன்னும் கொஞ்ச நேரத்தில் முடிந்து விடலாம். அப்போதுதான் வெளியிலிருந்து ஓர் ஆள் திடீரென்று உள்ளேவந்து அண்ணாவின் காதோடு காதாக ஏதோ பேசினான். உடனே அவர் என்னிடம், "வைரம்! என்னை எங்கள் கம்பெனி முதலாளி அவசரமாக வரச்சொன்னாராம். வீட்டுக்குப்போய் தேடி விட்டு வந்திருக்கிறான் இந்த ஆள்! நான் இப்படியே நேராகப் போகிறேன். நீ முழுவதும் பார்த்து விட்டு வீட்டுக்குப் போ!" என்று சொன்னார்.

ஆனால் மீண்டும் மறுபுறம் பார்த்துவிட்டு, "அடடே! மறந்து விட்டேனே! நம் ஆனந்தன் இருக்கும் போது, நீ ஏனம்மா தனியே போக வேண்டும்? அவன் நம் வீடு வரைக்கும் வந்து விட்டுச் செல்வான்," என்று சொல்லி அவனிடமும் விடை பெற்றுக் கொண்டு போய்விட்டார்.

எழுந்து புறப்பட்டேன். அதற்குள் ஆனந்தன் "வாருங்கள்! கார் இருக்கிறது, அப்படியே உங்கள் வீட்டில் கொண்டுபோய் விட்டு விட்டுப் போய் விடுகிறேன்" என்று சொல்லி அழைத்தான். எனக்கு ஏதோ இனந்தெரியாத பயம்! ஓரளவு தயங்கினேன். ஆனாலும் அண்ணாவின் பேச்சு நம்பிக்கை அளித்தது. காரில் போய் ஏறினேன். கார் ஓடியது.

இரவானதால் எந்தெந்த சாலைகளின் வழியாகக் கார் போகிறது என்று தெரியவில்லை. ஆனால் இறுதியில் உண்மை புலனாகிவிட்டது. அவன் ஏதோ தவறான வழியில் அழைத்துச் செல்கிறான் ..இல்லை, இல்லை கடத்திச் செல்கிறான் என்று நன்றாகப் புரிந்து கொண்டேன்.

கடைசியில் என்னுடைய பதட்டத்தையும் பொருட்படுத்தாமல் ஒரு வீட்டின்முன் கார் வந்து நின்றது. இறங்கிஉள்ளே வருமாறு அழைத்தான் ஆனந்தன். நான் அஞ்சி நடுங்கினேன். அவன் குரலில் கடுமை கலந்து வீசியது. பின் உள்ளே கொண்டு போகப்பட்டேன். பிறகு ..பிறகு என்னம்மா சொல்வேன்? அந்த வல்லூறு தன் ஆசை வெறிக்கு என் பெண்மையைப் பலி கொண்டு விட்டது ..

பின்பு நம் மாளிகைக்குக் கொண்டுவரப் பட்டேன். 'பாவி! நீ அங்கேயே செத்துத் தொலைப்பது தானே!' என்று கூறுவீர்கள்! ஆனால் உங்கள் மகளின் மீது 'ஓடிப்போனவள்" என்றெல்லாம் புதுப்புது பழிச்சொற்கள் கிளம்பக் கூடாது, பாருங்கள், எனவே வீட்டுக்கு வந்தேன். நான், அண்ணா இருவரும் சேர்ந்தே வருவோம் என்ற எண்ணத்தில் நீங்கள் நிம்மதியுடன் தூங்கிவிட்டீர்கள். நானோ என்மானத்தை இழந்து உயிரை மட்டும் கையில் பிடித்துக் கொண்டு உள்ளே நுழைந்

தேன்! அறைக்குள் சென்று நடந்த செய்தியை ஒரு கடிதத்தில் எழுதினேன். காரணம் செல்வமண்ணு இதை முக்கியமாக உணரவேண்டுமென்பதால் ! அம்மா! அதற்குமேலும் என் உயிர் உடலில் ஒட்டியிருப்பது எனக்குப் பாரமாகப்பட்டது; அதற்கு ஒரு கத்தி உதவி செய்தது ! தாயே! இப்படிப்பட்ட பாவி ஏனம்மா வாழவேண்டும்? அழாதீர்கள். உங்களைக் காப்பாற்ற என் அருமை அண்ணன்மார் இருவர் இருக்கிருர்கள். என்னை முழுக்க முழுக்க மறந்து விடுங்கள் அம்மா!" வைரம் அழுது கொண்டே பேசி முடித்தாள்.

உடனே அந்தத் தாய், "செல்வம்! செல்வம்! நீயா என்னைக் காப்பாற்றப் போகிருய்? எப்படிக் காப்பாற்றப் போகிருய்? உன் தங்கை சொல்கிருளே எனக்கு ஆதரவு நீயென்று! ஆனுல்...நீயும் ஏனப்பா துரோகம் செய்து விட்டுப் போய் விட்டாய்?" இப்படிக் கேட்டு வாய் விட்டு அலறிருள்.

அவளின் பரிதாபக் குரலை பொறுக்க முடியாமல் படத்திலிருந்த செல்வமே பேசத் தொடங்கிவிட்டான்,

"அன்னையே! பழித்துப் பழித்துக் காட்டாதீர்கள் அம்மா! உங்கள் நிலை எனக்குப் புரிகிறது. வேண்டுமென்ரு உங்களைத் தவிக்க விட்டுப் பிரிந்தேன் நான்? சூழ்நிலை சூது சேர்த்துவிட்டதே அம்மா!

அருமைத் தங்கையின் மானம் பறிபோக அவன் அண்ணனே துணையாக இருந்தான் என்ற அவச்சொல் என்னை அணு அணுவாகக் கொல்லுமே என்று அஞ்சினேன். அதனுல் உங்களிடம்கூடச் சொல்லாமல் உலகத்திலிருந்தே விடை பெற்று விட்டேன் அம்மா...! வைரத்தின் இதயம் என்னை நிச்சயமாக மன்னிக்காது! உங்கள் தங்கமான இதயமாவது என்னை மன்னிக்கட்டும். அதுவே போதும்!

என்னை நிலைக்களனுகக் கொண்டு ஏதேதோ மனமாளிகை எழுப்பியிருப்பீர்கள். அந்த நம்பிக்கையெல்லாம் பாழடைந்து போகுமாறு உங்களை ஏமாற்றியதற்கு என்னைப் பொறுத்துக் கொள்ளுங்கள்.

'உன் தங்கையின் மானத்தை மீட்க முனைந்தவன் ஏனப்பா தற்கொலை செய்து கொண்டாய்?" என்று உங்கள் உள்ளம் என்னைக் கேட்கும். அம்மா! நீங்காத மாசு சேர்த்துவிட்டான் ஆனந்தன் என்று வைரம் தன்னுடைய இரத்தத்தால் எழுதி வைத்த கடிதம் என்னை முழுப் பித்தனுக்கிவிட்டது.

உடனே ஓடினேன். ஆனந்தர்கள் இந்த உலகத்தில் வாழ்ந்து கொண்டே இருந்தால் வைரங்களைப் போன்ற எண்ணற்ற சகோதரிகள் மண்ணேடு மண்ணுனவர்கள் என்ற எண்ணம் அவன் வீட்டுக்கு என்னை துரத்திச் சென்றது. அங்கே ஆனந்தன் — அந்த நம்பிக்கைத்துரோகி குடித்து விட்டு ஏதோ பிதற்றிக் கொண்டிருந்தான். எனவே நான் சென்றநிலையை அவனுல் சரிவரப் புரிந்து கொள்ளக்கூட முடியவில்லை.

என்னுடைய எண்ணத்தைநிறைவேற்றிக் கொள்ள அந்த சூழ்நிலை எனக்கு மிகவும் ஒத்துழைத்தது. எந்த இதயம் என்னுடைய வைரத்தின் அவலக் குரலுக்குச் சிறிதும் இளகாமல் அவளைச் சீரழித்ததோ, அந்தக் கல் இதயத்திலே என்னுடைய கட்டாரியைப் பாய்ச்சினேன். கையெல்லாம் ஒரே இரத்தம்! அலறிக் கொண்டே கீழே விழுந்தான் ஆனந்தன்! அந்த அலறல் என் காதில் ஏதோ வெற்றிச் சங்கமாக ஒலித்தது!

வெளியே வந்தேன் இரத்த வெறியனாக! பிறகுதான் எனக்குச் சுயநினைவு வந்தது. 'இந்த நிலையில் வீட்டுக்குப் போனால்...நான் ஏன் வீட்டுக்குப் போகவேண்டும்? செய்ய வேண்டிய கடமை முடிந்து விட்டது. பழிக்குப்பழி தீர்த்தாகிவிட்டது. இனி இல்லத்திற்குப் போனாலும் அங்குள்ளவர்களுக்கும் தீராத பழிதான். எனவே..." என் மனதிலே ஓயாத போராட்டப் புயல் சுற்றிச் சுற்றி அடித்தது. இறுதியில் நான் தீர்மானித்த முடிவை நிறைவேற்றிக் கொண்டேன். அம்மா! அது பாதகமானாலும் நான் வைரத்தை நேரில்கண்டு அவளிடம் மன்னிப்பு கேட்க வேண்டும் போலத் தோன்றியது. ஆகவேதான் அம்மா இரயில் தண்டவாளங்களைச் சரணடைந்தேன்...உங்களுக்கு நான் என்னையறியாமல் வேறு ஏதேனும் தவறு செய்திருந்தால் மன்னித்துக் கொள்ளுங்கள்; என்னை மறந்து விடுங்கள். அருமை அண்ணா முத்து இருக்கிறார் நம் குடும்பத்திற்கு. என்னை முழுக்க முழுக்க மறந்து விடுங்கள்." ஒருவாறாக செல்வம் கேவிக்கேவி அழுது கொண்டே தன் பேச்சை முடித்தான்.

மீண்டும் அந்தத்தாய் படத்திலிருந்த முத்துவின் உருவத்தைப் பார்த்தாள்; அவள் கண்கள் பொங்கும் குளங்களாகக் காட்சி யளித்துக் கொண்டிருந்தன.

"முத்து! நீதானா குடும்பத்தின் கலங்கரை விளக்கம்? செல்வம் சொல்வதில் ஏதேனும் உண்மை இருக்கிறதா? ஏனப்பா நீயும் பொறுப்பற்றவனாக எங்களைத் துன்பச் சூழலில் தூக்கி எறிந்து சென்று விட்டாய்? "அந்த அன்னையின் அவலக்குரல் கேட்டு படத்திலிருந்த முத்துவே பேசத் தொடங்கினான்.

"அம்மா! பெறாத செல்வங்களைப் பெற்றெடுத்த தாயே! கொஞ்சம் கொஞ்சமாகச் சொற்களால் குத்திக் கொல்லாதீர்கள்! உண்மையில் நான் தான் மாபாவி! ஒப்புக்கொள்கிறேன்.

'குடும்பத்திற்கு மூத்தவனாக இருந்தும் பொறுப்பற்ற முறையில் நடந்துகொண்டுவிட்டாயே! இது தானா ஈன்ற மாதாவுக்கு நீ செய்யும் கடமை?' என்று உங்கள் குமுறும் இதயம் என்னைத் திட்டித் தீர்க்கிறது. அம்மா! உங்களுக்கே தெரியுமே! செல்வத்துக்கிருக்கும் நெஞ்சுரம்கூட அனேக நேரங்களில் எனக்கு இருப்பதில்லை. பிறக்கும்போதே கோழையாகப் பிறந்துவிட்டேன். இப்படிப் பட்ட கோழைக்குத்தான் இந்த சமுதாயம் போலீஸ், சீ. ஐ. டி வேலை வாங்கிக் கொடுத்தது. பொறுப்பேற்றவுடன் அதில் ஏதோ மும்முரமாகத் தான் தொண்டாற்றி வந்தேன். ஆனால் எந்தவேலை நானும் நம் குடும்பமும் வாழ ஏற்றம் கொடுத்ததோ, அதே தொழிலின் கௌரவத்திற்காகத்தான் என் உயிர் பலிகொள்ளப்பட்டுவிட்டது.

வைரத்தின் கற்பு பாழாக்கப்பட்டது. மூத்தவனாகிய நான் இதைப் பற்றி அறிவதற்குள் தம்பி செல்வம் குடும்பத்தின் மானம் அழித்தவனின் உயிரையே அழித்தான். அதை விசாரணை செய்ய நானே ஆனந்தனின் மாளிகைக்கு அனுப்பப்பட்டேன். அங்கே அரக்கச் செயல் புரிந்தவனை அழித்தவன் நமது தம்பியே என்று உணர்ந்தேன். அதை மேன்மேலும் விசாரணைசெய்து நம் குடும்ப கௌரவத்தை வெளியுலகுக்குக் கொண்டு வர என்மனம் துணியவில்லை. வேறு என்ன செய்வதென்றும் புரியவில்லை. அந்த நிலையில் என் பலவீனமான இதயம் என்கையிலே துப்பாக்கியைத் தான் தூக்கிக் கொடுத்தது.! அம்மா! ஒன்றே ஒன்று நினைவில் வைத்துக் கொள்ளுங்கள். நான் உங்களை நட்டாற்றில் விட்டுப்போவது உண்மை! ஆனால் தம்பியையே காட்டிக்கொடுக்கும் துரோகியாக நான் மாறவில்லை

யம்மா! அதற்கு என் துப்பாக்கி ரவைகள் எனக்குத் துணைசெய்துவிட்டன! நான் உலகிலே இருக்கும் ஒவ்வொரு விநாடியும் நம் குடும்பத்திற்கே ஆபத்தம்மா! எனவே நான் என்னையே நான்அழித்துக்கொண்டேன். உனக்கு இந்தக் கோழைமகன் வாழ்ந்தாலும் ஒன்றுதான்; அழிந்துபட்டாலும் ஒன்றுதான்! ஆகவே என் இறப்பை ஒரு பொருட்டாகக் கருதாதீர்கள். எப்படியோ பிறந்தேன். எப்படியோ இறந்தேன். என்னைப்பற்றிய வாழ்க்கை உங்களுக்கு ஒரு கனவாக இருக்கட்டும். என்னை முற்றிலும் மறந்துவிடுங்கள். இல்லையேல் திட்டித் தீர்த்துக்கொண்டே இருப்பீர்கள்!" முத்து அழுகையுடன் தன்முடிவை ஒருவாறாகக் கூறிமுடித்தான்.

அந்த அன்னையின் விழிகள் அருவியை உண்டாக்கிக் கொண்டிருந்தன. பிறகு என்ன நினைத்துக்கொண்டாளோ, அந்தப் படத்தை அருகே கொண்டுவந்து ஒவ்வொரு உருவத்திற்கும் மாறிமாறி முத்தம் கொடுத்தாள்.

அவளுக்கு 'ஓ'வென்று கதறியழுதால்தான் நிம்மதி ஏற்படும்போல் தோன்றியது. சத்தமிட்டே அழத் தொடங்கிவிட்டாள். வெளியே அவள் குரலைக் கேலிசெய்வதுபோல் சொறிநாய் அழுது ஊளையிட்டுக் கொண்டிருந்தது.

*   *   *

பொழுது விடிந்தது. அந்த அழகு மாளிகையின் பக்கத்து வீட்டிலிருந்த ஒரு பெண் ஏதோ கடன் வாங்கி வருவதற்காக உள்ளே நுழைந்தாள். அந்த மாளிகையில் ஆள் அரவமே இல்லை. அந்த முதியவளை 'அத்தை, அத்தை' என்று அழைத்தாள் வந்தவள். பதிலே இல்லை.

புறக்கடைக்குப் போய்த் தேடினாள். காணாமையால் அங்கே இருந்த கிணற்றினுள் எட்டிப் பார்த்தாள். அதிலே, உலர்ந்துவிட்ட மரம் மிதப்பதுபோல, உயிரை எப்பொழுதோ கடத்திவிட்ட அந்த முதியவளின் உடல் நீர்மட்டத்தில் ஆடி அசைந்து கொண்டிருந்தது!

கொஞ்சநேரத்தில் சுற்றுப்புறத்தில் இருந்தவர்கள், அங்கே வந்து அந்தப் பிணத்தை வெளியே எடுத்தார்கள்; அது தன் கையிலே இன்னும்கூட ஏதோ ஒருபொருளை இறுக்கிப் பிடித்துக்கொண்டிருப்பதைக்கண்டார்கள். அவள் நேற்று இரவெல்லாம் தன் கண்ணீரால் குளிப்பாட்டிய அதே படம்தான் அது!

கூடி இருந்தவர்கள் கொஞ்சநேரத்தில் பிரிந்து சென்றார்கள்; அதிலே ஒருவன் சொல்லிக்கொண்டு போகிறான்:

"சே! குடும்பம் முழுவதுமா தற்கொலை செய்துகொள்வது?"

# நகைச்சுவைக் கட்டுரைப் போட்டி

இப்போட்டி பற்றிய விபரங்கள் அனைத்தும் அடுத்த இதழில் வெளியாகின்றன.

— ஆசிரியர்.

# வாசகர் போட்டி-3

**போட்டி**யில் பங்குபற்றும் நேயர்கள் கொஞ்சம் தாராள மாகவே எழுதட்டும் என நாம வாய்ப்பளித்ததால் ஏராளமான நேயர்கள் தம் கைவரிசையைக் காட்டியுள்ளனர். பரிசுத்தொகை கீழ்க்கண்ட நால்வருக்குப் பகிர்ந்தளிக்கப்படுகின்றது

1, **திரு. ச. சிவகுமாரன்**
மே/பா திருமதி. P. தர்மா,
வலந்தலை,காரை நகர்.

2. **செல்வி R. பத்மினி**
ஒளலொங் வில்லேஜ்,
மலாயா

3. **செல்வி. பாத்திமா ஹுஸைன்**
கொழும்பு வீதி.
கண்டி.

4. **செல்வி. R. கணபதிப்பிள்ளை**
வெள்ளவத்தை.
[விலாசம் தெளிவாயில்லை]

1. பரிசு பெற்ற விமர்சனங்களிலிருந்து சில பகுதிகள்:-

**ம**ங்கையர் திலகத்தில் நடித்து நடிகைகள் திலகமாகி மதுரை, வீரனில் மக்களின் மதிப்பைப் பெற்று தங்கப்பதுமை யில் மங்காப் புகழ் அடைந்த பத்மினி "தெய்வபிறவி"யில் தன் நடிப்பால் தான் என்ன பிறவி என்று எம்மைக்கூற வைக் கப் போகிருர்.... பத்மினி என்னைமட்டும் கவர்ந்தவரல்லர், எல் லோரையும் கவர்ந்தவர்.... **ச.சிவகுமாரன்.**

2. நடிப்பிற்கோர் பத்மினி, நாட்டியத்திற்கோர் பத்மினி, அழ கிற்கோர் பத்மினி என் இதையத்திற்கோர் பத்மினி..,தங்கபது மையில் எங்கள் உள்ளத்தைப் பொங்கிடச் செய்த நங்கையர் திலகம் நாட்டியராணி பத்மினி.... பத்மினி.... பத்மினி....
**செல்வி R. பத்மினி.**

இம் மூன்று போட்டிகளிலும் உற்சாகமுடன் கலந்துகொண்ட வாசக நேயர்கள் அனைவருக்கும் எம்நன்றி. அறிவுவளர்ச்சிப் போட்டியில் சற்று அதிக கவனம் செலுத்த வேண்டியுள்ளதால் வாசகர் போட்டியைத் தற்காலிகமாக நிறுத்தியுள்ளோம்.

- ஆசிரியர்.

# ஐக்கிய இலாப நிதி

--1918-ம் ஆண்டு ஸ்தாபிதமானது--

**வங்கிக்காரர் மூலநிதி 8 லட்சம் ரூபா**

**இதுவரை கொடுக்கப்பட்ட பங்குப்பணம் 616313.00**
**100 ரூபா விகிதமான 8000 பங்குகள்**

**பங்குப்பணம் கட்டு முறை**

மாதமொன்றுக்கு 1 ரூபா விகிதமான 80 மாச காலத்திற்கு மாசந்தோறும் கட்டப்பட வேண்டியது. குறித்த கால முடிவில் பங்கொன்றுக்கு ரூபா 100-00 திருப்பிக் கொடுக்கப்படும் பங்குகள் எந்த நேரமும் வாங்கலாம்.

**தினசரிப் பற்றுவரவு**

எச்சநிதி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானல் ஒருவிகித வட்டியுடன் தினசரிப் பற்றுவரவு செய்யலாம்.

**தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப்பணம்**

க்ஷேமப்பணம் 12 மாசம், 36 மாசம் என்னும் காலங்கள் வரையறுத்து ஏற்படும் வட்டியும் முறையே 8 விகிதமும் 6 விகிதமுமாகக் கொடுக்கப்படும்.

**உண்டியல்கள்**

கொழும்பிலுள்ள 'நாஷனல்' வங்கியிலும் 'இம்பிரீயல்' வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்க விதமாகக் கொடுக்கப்படும். தொடுவாய் இராச்சியப் பகுதியுலுள்ளவர்களுக்குக் கொடுக்கவும் வாங்கவுமான விஷேச ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன.

**கடன்**

நகைகள் ஈடு வைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும் முதலையும் பாகமாகக் கொடுக்கலாம்.

**இன்னும் வேண்டிய விபரங்களை என் மூலமாக அறிந்து கொள்ளலாம்**

**எஸ். கனகசபை**
சிறுப்பர்.

நிரந்தர சேமிப்புக்கு, கீழ்க் குறிக்கப்பட்ட வீதம்

## வட்டி கொடுக்கப்படும்.

1 வருடம் - 6 சத வீதம்.
2 வருடம் - 7 சத வீதம்.
3 வருடம் - 8 சத வீதம்.
5 வருடம் - 9 சத வீதம்.

சேமிப்பு கணக்கிற்கு

**வருடம்**
**5 சத வீதம் வட்டி கொடுக்கப்படும்**

நவீன சேமிப்பிற் சேர்ந்து பல நன்மைகளையும் அடையுங்கள்

இலங்கையில் விசேஷமாக ஏற்படுத்தப்பட்டது.
முழு விபரங்களும் இலங்கா நிதி ஆபீசில் அறியலாம்.

# இலங்கா நிதி லிமிற்றெட்

திருநெல்வேலி : : யாழ்ப்பாணம்

கிளை:
284, காங்கேசன் துறை வீதி : : வண்ணார்பண்ணை

நகைச்சுவையும் நல்ல கருத்தும் கலந்தென்றும்
பகையுணர்ச்சி மாய்க்கும் பட் பட்''

# பட்! பட்!!

—தாண்டவக்கோன்—

சி. தவமணி தபாற்கந்தோர் வீதி, சாவகச்சேரி.

கே. தாண்டவக்கோன் மாமா அவர்களே, இலட்சிய நடிகர் S. S. இராஜேந்திரன், நடிகை விஜயகுமாரியைத் திருமணம் செய்தது உண்மையா?

ப. உண்மைதான் மருமகளே! அவர்கள் இப்பொழுது கணவன் மனைவியர்களாகவே வாழ்கின்றார்கள். இந்தக் காரணத்தால்தான், இலட்சிய நடிகை என்ற பட்டமும் விஜயகுமாரியுடன் சேர்ந்திருக்கின்றது.

க. தங்கராசா, வலந்தலை காரைநகர்.

கே. சிலர் நெடுகக் கதைத்துக் கொண்டிருக்கிறார்கள். காரணம் என்ன?

ப. ஓட்டைக்குடம் தான் அதிக சத்தத்தை உண்டாக்கும்!

க. இரத்தின சிங்கம், கிளிநொச்சி.

கே. அந்தக் காலத்துப் பெண்கள் சமைக்கும் சோற்றுக்கும் இந்தக் காலத்துப் பெண்கள் சமைக்கும் சோற்றுக்கும் வித்தியாசம் உண்டாமே! உண்மையா?

ப. அந்தக் காலத்துச் சோற்றில் ருசி நிறையும், பசிமறையும்; இந்தக் காலத்தில் கிலி நிறையும், வலி பெருகும்.

ஞானு தம்பித்துரை, லேக்ரோட், குருநாக்கல்.

கே. 'வஞ்சம்' எழுதிய 'இலங்கையர் கோன்' என்பவரும், 'ஈழநாடு' மாதர் பகுதியில் எழுதும் 'நந்தி'யும் ஒருவரா?

ப. இல்லை. இருவருடைய சொந்தப் பெயர் ஒன்றுதான்—சிவஞானசுந்தரம். 'இலங்கையர்கோன்' வவனியா (தமிழ்ப்பகு)வில் காரியாதிகாரியாகப்பணியாற்றுகின்றார். 'நந்தி, நாவலப்பிட்டி அரசினர் வைத்தியசாலையில் வைத்திய அதிகாரியாகப் பணிபுரிகின்றார்.

ம. இரத்தின சபாபதி, 84/3, தபாற்கந்தோர் ஒழுங்கை, யாழ்ப்பாணம்.

கே. மனித சமுதாயம் எத்துறையில் முன்னேறியிருக்கிறது?

ப. ஆண்கள் சைக்கில் 'பாரி'ல் (Cycle bar) ஏறுவதிலும் பெண்கள் பிறேஸியர்' கட்டுவதிலும்!

R. இராசரத்தினம் கல்லூரி வீதி, கொட்டாஞ்சேனை

கே. கள் அருந்திய நால்வர் காங்கேசன் துறையில் இறந்துவிட்டார்களாமே, இது பற்றி என்ன நினைக்கின்றீர்கள்?

ப. ''நஞ்சுண்பார் கள்ளுண்பவர்'' என்று எப்போதோ சொல்லிவிட்டாரே நமது வள்ளுவர்!

ஆனந்தன் கமலாபதி, அரியாலை.

கே. 18 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கு வாக்குரிமை வழங்குவதால் இலங்கையின் அரசியல் நிலை முன்னேறுமா?

ப. வகுப்பறைகள் பிரசார மேடைகளாக மாறும். மாணவர்களின் படிப்பு வளரும் – மாட்டுவால் போல் கீழ்

நோக்கி; அரசியல் நிலை மேலும் குழம்பும்.

அ. ஆனந்தக்குமாரசாமி நடுத்தெரு காரைநகர்

கே. கலர் சினிமாப் படங்கள் கண்களை அதிகமாகப் பாதிக்கின்றனவா?
ப. சினிமா பார்ப்பதே கண்களுக்குக் கெடுதல்தான். கலர்ப்படங்கள் கண்களைச் சற்று அதிகமாக வருத்துகின்றன என்பது சில வைத்திய அதிகாரிகளின் கருத்து.

டபிள்யூ. ஏ. அருளையா, 11, எலகம ரோடு, பதுளை.

கே. தமிழ் மக்கள் இப்போ உள்ள நிலைமையில் எதை விரும்புகின்றார்கள்?

ப. இலங்கை வானொலி வர்த்தக ஒலி பரப்பை! தமிழ் மக்கள் மட்டுமல்ல, சிங்கள மக்களுமே இதைத்தான் விரும்புகின்றார்கள்!

K. P. வதி, சுழிபுரம்.

கே. ஈட்டி எட்டுமட்டும் பாயும், பணம் பாதாளம் வரையும் பாயும், தங்கள் கலைச்செல்வி...?

ப. பாயமாட்டாது. கற்றோர் நெஞ்சினுல் கவர்ந்திழுக்கப்படும்!

சு. தனராசா, சங்கானை,

கே. கல்வி கற்கும் மாணவனுக்கு எது அவசியம்?

ப. கல்வி கற்கவேண்டும் என்ற ஆவல்!

P. L. T. இராசா, சிங்கர் மெஷின் கம்பெனி, அக்கரைப்பற்று.

கே. மதுவுண்ட மங்கையொருத்தி தன் மணாளனிடம் என்ன கேட்பாள்?

ப. தன் வெறியைத் தீர்க்கும்படி.

சு. மாலிங்கம், சண்டிலிப்பாய்.

கே. ஐந்தாண்டுத் திட்டம், பத்தாண்டுத் திட்டம் முதலிய திட்டங்களை வகுத்துச் செயலாற்றுவதில் ருஷியா, சீனு போன்ற நாடுகள் வெற்றி பெறுவதற்கும், இந்தியா, இலங்கை போன்ற நாடுகள் தோல்வி காண்பதற்கும் காரணம் என்ன?

ப. அவர்கள் தேவையை மனதில் வைத்துத் திட்டமிடுகின்றார்கள்! இவர்கள் தேர்தலை மனதில் வைத்துத் திட்டமிடுகின்றார்கள்.

கே. மங்கையின் கண்ணீருக்கு இவ்வுலகில் எத்தகைய மதிப்புண்டு?

ப. முத்தென மதிப்பர் பித்துப் பிடித்த காதலர்கள்; பணம் விழுங்கும் திட்டத்திற்கான வித்தென மதிப்பர் விஷயம் தெரிந்த கணவன்மார்கள்; சோற்றுக்கும் சொர்க்கத்திற்கும் மேலான பெரும் சொத்தென மதிப்பர் கவிஞர்களும், கலைஞர்களும், கதாசிரியர்களும்!

க. சுப்பிரமணியம் களபூமி, காரைநகர்.

கே. மணவறையில் திருமணப்பெண் தலை குனிந்து இருப்பதேன்? அப்போது மணமகன் என்ன நினைப்பான்?

ப. 'எத்தனையோ பேரைத் தாங்கும் நீ, உன் சக்தியில் ஆயிரத்தில் ஒரு பகுதியாவது எனக்குக் கொடுக்கமாட்டாயா? என்று பூமாதேவியைக் கேட்பதற்காக தலை குனிந்து இருப்பாள் மணப்பெண். 'வீட்டின் பின்புறத்தில் இருக்கும் பூஞ்சோலையும், நகைக் கடையும் நன்றாகத்தான் இருக்கின் கின்றன. ஆனுல் 'போர்ட்டிக்கோ' எப்படி இருக்குமோ?' என நினைப்பான் மணமகன்!

கா. சரோச்சந்திரதேவன்
2ம் குறிச்சி, காரைதீவு.

கே. இன்றைய அரசாங்கம் எதற்

குச் சமன்?

ப. நொண்டிக் குதிரைக்கு. வண்டியிற் பூட்டினுல் நொண்டும்; வீட்டில் கட்டிப் புல்லும் கொள்ளும் போட்டால் வீண் நஷ்டம் நமக்கு ஏற்படும்; அவிழ்த்துக் கலேத்தாலும் போய்த் தொலேயாது!

து. உமாபதிசிவம், கரம்பொன் கிழக்கு, ஊர்காவற்றுறை.

கே. புகழ்பெற்ற எந்த ஆங்கிலக் கவிஞன் குருடராக இருந்தார்?

ப. "இழந்த சொர்க்கம்" என்ற மாபெரும் காவியத்தை எழுதிய மில்டன் என்பவர்.

S. பாண்டியன், 26, பஜார் வீதி, வவுனியா.

கே. மாணவர் சினிமா பார்ப்பதால் கெட்டுவிடுகின்றனர் என்பது சிலரின் கருத்து. தங்கள் கருத்து யாது? தாங்கள் இலங்கை மாணவர்களேப் பற்றி என்ன நினேக்கின்றீர்கள்?

ப. தாங்கள் "கலேச்செல்வி"யை ஒழுங்காகப் படிப்பதில்லேயோ? முதலாவது கேள்வியின் பதிலே "கலேச்செல்வி" ஆண்டுமலரிலும், இரண்டாவது கேள்வியின் பதிலே சென்ற இதழிலும் கூறியுள்ளேனே!

சு. அன்னபூரணம், செம்மணி ரோட், நல்லூர்.

கே. கற்புத் தெய்வம் கண்ணகியைக் கண்டு களித்த கடவுள் இக்காலத்தில் தெருவில் களிநடனம் புரியும் நாகரிக மங்கையரைக் கண்டால் என்ன நினேப்பார்?

ப. கண்ணுடி வியாபாரியாக அவதாரம் எடுக்கவேண்டும் என்று நினேப்பார். அவர்களின் க(ா)ளி நடனத்தை அடக்கும் சக்தி கண்ணுடிக்குத்தான் உண்டு.

ஆர். கமலநாதன் 2ம் கட்டையடி, நல்லூர்.

கே. சில நாட்களுக்கு முன் செங்குந்த இந்துக் கல்லூரியில் நடைபெற்ற "மனிதனு நீ" என்ற சமூக நாடகத்தையும் "புழுகு கந்தர்" என்ற ஹாஸ்ய நாடகத்தையும் பார்த்தீர்களா? உங்கள் அபிப்பிராயம் என்ன?

ப. மனிதனு நீ?"— நாடகத் தலேப்பில் உள்ள கவர்ச்சி நாடகத்தில் இல்லே. கதையின் போக்கை மாற்றி அமைத்திருக்கக் கூடாதா? கடைசியில் எல்லோருமே மரணத்தைத் தழுவுகின்றனர். கதாசிரியரின் கற்பனேக் குறைவை இது காட்டவில்லேயா? நடிகர்கள்கஷ்டப்பட்டு நடித்தார்கள். குடிவெறிக்காட்சி தத்ரூபம்! சீன், செட்டிங்ஸ் பிரமாதம் குறைகள் பல இருந்தும் நாடகத்தை ரசிக்க முடிந்ததென்ருல், அதற்குக் காரணமாக இருந்தவர் நட்டுவாங்கம் செய்த நண்பர் ஆலால சுந்தரம் அவர்களே. அசரீரியாகப் பேசி பின்னணிபாடி, நாடகத்திற்குத் தேவையானஒலி விசித்திரங்களே அவ்வப்போதுஉண்டாக்கி, எத்தனே, பாடுபட்டார்,மனுஷன்! "புழுகு கந்தரி"ல் கதைஇல்லே. கருத்தும், ஹாஸ்யமும்,நடிப்பும்நிறைய இருந்தன.சமூகத்தின் சில குறைகளே "நாசூக்"காகக் கிண்டல் செய்யும் வசனங்கள் நாடகத்தின் உயிர். புழுகு கந்தராக நடித்த சுந்தரத்தையும் கூத்தாடிச் சுப்பராக நடித்த ஆலால சுந்தரத்தையும் யார் மறந்தாலும் நான் மறவேன்!

அ. இராஜகுலதேவி சித்தாவத்தை உடுவில்.

கே. தாயிடம் மழலே பேசி விளேயாடும் பருவம்; பாடசாலேயில் கல்வி பயிலும் காலம்; திருமணமாகி இல்லற வாழ்க்கை நடத்தும் காலம்; பழுத்த சமயவாதி ஆகும் காலம்; ஆகியநான்கு காலங்களிலும் ஒருவருக்குமகிழ்ச்சியும்கீர்த்தியும் கொடுக்கும் காலம் எது?

ப. முதற்காலத்தில் 'இளங்கன்று

பயமறியாது; இன்பமெது, துன்பமெது, என்பதையும் அறியாது; கல்வி, கனவு, கற்பனை ஆகியவற்றில் ஈடுபட்டுள்ள கவலையற்ற காலம் இரண்டாவது காலம். குளிக்கப் போய்ச் சேற்றைப் பூசிக் கொள்ளும் காலம் மூன்ருவது காலம். சூடுகண்ட பூனையாய், எட்டாப் பழம் புளிக்கும் என்றதத்துவத்தைக் கண்டுபிடிக்கும் காலம் நான்காவது காலம். உள்ளதுக்குள்ளே வள்ளிசாக இருக்கும் இரண்டாவது காலத்தில் தான் மகிழ்ச்சி அதிகரிக்கும். கீர்த்தி கிடைப்பது அவரவர் திறமையையும் அதிர்ஷ்டத்தையும் பொறுத்தது.

செ. சண்முகலிங்கம், வேலணை கிழக்கு, வேலணை.

கே. 'கல்யாண பரிசு' படத்தில் ஜெமினி கணேசஞ அல்லது வேறு ஒருவரா விரைவாக அந்த மோட்டார் சைக்கிளை ஓட்டியது?

ப. எவருமே அவ்வளவு விரைவாக ஓட்டவில்லை. ஜெமினி சாதாரணமாகத்தான் சைக்கிளை ஓட்டினர், ஆனல் கமராமன் தன் கைவரிசையைக் காட்டி எம் கண்களை மயக்கிவிட்டார்!

மு. தயாபரன். நெல்லண்டை வீதி தும்பளை.

கே. தற்காலத் தமிழ் மகளிர் வீரம் பற்றி விளம்புவீரா?

ப. அவர்கள் வீராதி வீரிகள்! அவர்கள் நினைத்தால், ஒரே வெட்டில் கையையும், காலையும், கழுத்தையும் வெட்டிவிடுவார்கள். (சந்தேகமிருந்தால் அவர்கள் தையல் வேலைசெய்யும் போதும், இறைச்சிக் கறி சமைக்கும் போதும் போய்ப் பார்க்கலாம்)

இ. யோகேந்திர நாதன், திருநெல்வேலி கிழக்கு.

கே. திருநெல்வேலி இளைஞர்கள் ''கலாஜோதி" என்ற மாத இதழ் வெளியிடப்போவதாகக் கூறுகின்ருர்களே, அதைப்பற்றி உமது அபிப்பிராயம் என்ன?

ப. வரவேற்கப்படவேண்டிய விஷயம். தரமான விஷயங்களைத் தாங்கி, கண்ணைக்கவரும் வண்ண உடையுடன் வெளிவந்தால், என்னைப் போன்ற இன்னும் எத்தனையோ பேர் வரவேற்பார்கள். அது சரி, பத்திரிகை எப்பொழுது வெளிவருகின்றது? உள்ளமெல்லாம் அதே நினைவாக, உடம்பெல்லாம் அதைப் பார்க்கத் துடிக்கும் கண்களாக வைத்துக் கொண்டு காத்திருக்கிறேன்.

நாடகப்பிரியன், வண்ணார்பண்ணை

கே. யாழ்ப்பாணச் சூழ்நிலையில் கதையெழுதி, யாழ்ப்பாணத்திலுள்ள சிறந்த நடிகர்களைக் கொண்டு ஒரு படம் தயாரித்தால். அதில் யார் யாரை நடிக நடிகையராகப் போடலாம்?

ப. யாழ்ப்பாணத்தில் நடிகைகளே இல்லை. ஆகவே நடிகர்களை—எனக்குத் தெரிந்தவர்களை மட்டும் குறிப்பிடுகிறேன். கலையரசு சொர்ணலிங்கம், சதா சிறீநிவாசன், கொமிக் செல்வரத்தினம், சானு, கொழும்பு சிவத்தம்பி, திருநெல்வேலி சண்முகலிங்கம், சங்கானை சிவானந்தன். பபூன் இரத்தினம். திருநெல்வேலி ஆலாலசுந்தரம், யாழ்ப்பாணம் இராஜேஸ்வரன், மானிப்பாய் கனகரத்தினம், இரகுநாதன், செல்லம்ஸ் S. T. அரசு, குருப்பசிட்டி பொன்னுத்துரை, அளவெட்டி நாகராஜா.

க. இராமலிங்கம் காலி.

கே. 'அழகு சொட்டுகின்றது' என்று சில கதாசிரியர்கள் எழுதுகின்ருர்களே, இதன் அர்த்தம் என்ன?

ப. லிப்ஸ்டிக்,, ஐடெக்ஸ் போன்ற பாணிகளைத் தம் மூஞ்சியில் அப்பிக் கொண்டு நகர்வலம் வருகின்ருர்களல்லவா சில பெண்கள்? சூரிய வெப்பத்தாலும், நடந்த களைப்பினுலும் அவர்கள் உடம்பு கசிய, அழகு சொட்டும்!

தா. மனேன்மணி, எட்டம்பிட்டியா.

கே. எமனை ஏமாற்றிய 'எழுத்தாளர் யார்? எத்தனை தடவை ஏமாற்றினார்?

ப. கார்ள் செஸ்மன் என்ற அமெரிக்கர் எமனை எட்டுத்தடவை ஏமாற்றினார். எமனைக் காக்க வைத்துவிட்டு சிறையிலிருந்தபடியே எத்தனையோ நாவல்கள் எழுதினார். முதன் முதலாக, 1952, மார்ச் 28ல் இவர் இறக்க வேண்டும் என்று தீர்ப்பளிக்கப்பட்டது. ஆனால் சுப்ரீம்கோர்ட் நீதிபதிஒருவரால் அந்தத் தீர்ப்பு மாற்றியமைக்கப்பட்டது. அதன் பின், அதே ஆண்டு ஜூன் 27, 1954 ஜூலை 30, 1955 ஜனவரி 14, 1955 ஜூலை 14, 1959 அக்டோபர் 23, 1960 பெப்ரவரி 19, ஆகிய நாட்கள் இவர் மரணத்தைத் தழுவும் நாட்களாகத் தீர்மானிக்கப்பட்டன. மேல் கோர்ட்டிற்கு மனுப்பண்ணி, எல்லாத் தடவையும் தப்பிவிட்டார். கடைசியில் 1960, மே 2ல் தப்பமுடியவில்லை. கடைசி நேரத்திலும் இவர் உயிரைக் காப்பதற்கு இவருடைய நியாயவாதியாகிய பெண்மணி அரும்பாடுபட்டாள். அப்பெண்மணியின் வாதத்தைக் கேட்ட நீதிபதி, தீர்ப்பை நிறைவேற்ற வேண்டாமென உத்தரவிட்டார். ஆனால் டெலிபோனில் ஏற்றப்பட்ட சிறு குழப்பம் காரணமாக, அந்த உத்தரவை உடனே அறிவிக்க முடியவில்லை. அதற்கிடையில் நச்சுப்புகை சூழ்ந்த அறைக்குள் தள்ளப்பட்டுவிட்டடார் செஸ்மன். இது பரிதாபமாக இல்லையா?

குறிப்பு:– கேள்வி கேட்பவர்கள் தங்கள் பெயர், முகவரி ஆகியவற்றைத் தெளிவாக எழுதி, கீழேயுள்ள முகவரியை வெட்டி ஒட்டி அனுப்புதல் வேண்டும், முகவரி ஒட்டப் படாத கடிதங்கள் ஆசிரியரின் குப்பைக் கூடைக்குள் சென்றுவிடுகின்றன. எனக்குக் கிடைப்பதில்லை. என் பதில் வேண்டுமென விரும்புபவர்கள், இதைக் கவனிக்க வேண்டும்

—தாண்டவக்கோன்

**தாண்டவக் கோன்**
மே/பா கலைச்செல்வி,
சுன்னாகம்.

இம்மாதம் பரிசு பெறுபவர் திரு. க. சுப்பிரமணியம், களபூமி, காரைநகர்.


# கலைச்செல்வி விற்பனையாளர்கள்

**த. தம்பித்துரை**
226 ஆஸ்பத்திரி வீதி.
யாழ்ப்பாணம்

**ஹோட்டல் பிருந்தாவனம்**
ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

# அண்ணமலை நகரிலே

—வித்துவான் க. ந. வேலன்—

**முன்னுக்குச் சில வார்த்தைகள்:**

இவ்வளவு தொந்தரவு வருமென்று நான் எதிர்பார்க்கவேயில்லை. ஒருநாள் பேச்சோடு பேச்சாக அண்ணமலை நகர் வாழ்க்கையைப் பற்றிக் குறிப்பிட்டேன். கலைச்செல்வி ஆசிரியர் சிற்பி உடனே கையில் உளியை எடுத்துவிட்டார். ஏறக்குறைய ஆறுமாத காலமாகக் குடைகிருர். "பெயருக்கேற்ற ஆள் தான் ஐயா நீர், சிரித்துச் சிரித்து உயிரையே வாங்கிவிட்டீரே."

எழுதுவது என்னைப் பொறுத்தவரையில் பொழுது போக்கல்ல; அது ஒரு வேலை. ஏனெனில் புலமைப்பாடு ஒன்று; புலமை வெளிப்பாடு மற்ருென்று. அதனுலேதான் புலவர்கள் பிறக்கிருர்கள் என்ருர்கள். புலவர்களென்ன, (கவியியற்றுவோர்) புலமையுள்ளவர்கள் எல்லோருமே பிறக்கிருர்கள், அதாவது பிறக்கும் போதே புலமையோடு பிறக்கிருர்கள். இதனைக் கருவிலேயமைந்த திரு என்ருர்கள் முன்னேர்கள். எழுத்தாளர்களும் புலமையுள்ளவர்கள், அவர்களும் பிறக்கிருர்கள், அவர்களும் கருவிலே திரு அமைந்தவர்கள். இப்படித்தான் நான் எண்ணுவது வழக்கம். ஏதாவது எழுதுங்கள், எழுதுங்கள் என்று சிற்பி போன்ற நண்பர்கள் குடையும்போது, புலவன் பிறக்கிருன், "ஒன்றனும் யாதோ கரிக்கன்று" "பன்றி பல குட்டி பயந்ததினுல் ஏது பயன்?". "இந்தப் பெரிய திருவள்ளுவர், திருக்குறள் ஒன்று தானே செய்தார்" என்று எண்ணுவேன். சோம்பலுக்கு நல்ல போர்வை. எதற்கும் மசியாத சிற்பி, என்னைக் குடைந்து குடைந்து ஒரு சிற்பத்தை வெளிக் கொணர்வதாக முடிவு கட்டி விட்டார்.

எழுதுவதும் சிற்ப வேலைதான். பேசுவதைவிட எழுதுவது மிகக் கடினம் என்ற கருத்து அறிவுலகத்தில் பரவிக் கிடக்கிறது. எதுவும் இயற்கையாக அமையாதபோது கடினம் என்பதுதான் உண்மை: கணக்கென்ருல் கற்கண்டு சிலருக்கு, பலருக்கு அது வேம்பு. இதுதான் வேறுபாடு. ஆனல் ஓரிடத்தில் உட்கார்ந்திருந்து எழுதும் பொறுமை எழுத்தாளர்களிடம் நிறை

யக் கிடக்கிறது. பொங்கிப் பொங்கி வரும் எண்ண அலைகள் சிந்திச் சிதறி நீராவதை எண்ணும்போது வருந்தத்தான் வேண்டியிருக்கிறது. 'உள்ளுவதெல்லாம் உயர்வுள்ளல்' என்று எண்ணத்தால் உயர்ந்த தமிழில், உலகம் வியக்க எழுத வேண்டும். உலகத்தில் பிறந்த ஒவ்வொருவரும் ஒவ்வொரு சிறந்த நாவலை எழுதமுடியுமென்று எங்கேயோ படித்த ஞாபகம். அதாவது நமது வாழ்க்கை வரலாற்றை எழுதிவிட்டால் அதுவேசிறந்த நாவலாக முடியும் என்று அவர் கருதுகிறுர். உண்மைதான், மனிதவாழ்க்கை ஒவ்வொன்றும் மர்மக்குகையே.

நானும் அந்த வார்த்தைகளின் உண்மைகளையுணர்கிறேன் அதன் மூலம் ஒரு எழுத்தாளனைப் பார்க்கிறேனே? இருந்தாலும் வயதுக்கு மிஞ்சின எண்ணம்; 80,90 வயதில் செய்யவேண்டிய வேலை என்னைப் பொறுத்தவரையில் எல்லாமே அப்படித்தான். முன் பின் என்ற ஒழுங்குக்குக் கட்டுப்பட்டதில்லை.

அண்ணுமலை நகரிலே....என்பது என்னைப் பற்றியும் எழுதுவதுதான். எனது வாழ்வின் ஒருபகுதிதான் அது. அதில் நிற்கும் அந்த நான், நானுக நிற்காது. என் பள்ளிவாழ்க்கையின் ஒருபகுதி வெறும் புத்தகப் படிப்போடு கழியாது எனக்குள்ளேயே சிலபுரட்சிகரமான மாறுதலையும் விளைவித்திருக்கின்றது. கதாநாயகன் நானுக இருந்த போதிலும் கதையில் அவன் முக்கியமல்ல. தமிழகத்தின் ஒருபிரிவாகிய தென்னிந்தியாவே [இலங்கையும் தமிழகமே] கதை நிகழும் இடமாதலால் தமிழ் நாட்டின் முக்கியத்துவம் குன்ருமல் பார்த்துக் கொள்வேன். முடிவாகச் சொன்னுல் முதுமையில் மேற்கொள்ள வேண்டிய வேலையை இளமையில் ஏற்றுக் கொண்டிருக்கிறேன். கதையில் வரும்பாத்திரங்கள் கற்பனையல்ல. கதையும் அப்படியே. ஆனுல் பச்சைப் பொய் சொல்வது எப்படித் தவருே, பச்சை உண்மையும் தவறுதான். எல்லாம் இடத்தைப் பொறுத்தன.

—தொடரும்

---

எழுத்தாளர்களுக்கும் எழுத்தாளர்களாக வர விரும்புபவர்கட்கும் இன்றியமையாத கட்டுரைத் தொடர்.

## நான் நினைப்பது

## அடுத்த இதழில் ஆரம்பம்.

# கொஞ்சம் பொறு

— முருகையன் —

நீலவான் வெளியே! நீதான்
நினைவிலே இன்பம் அள்ளிச்
சாலவே தருவாய் என்று
சாற்றவா கவிதை? வேண்டாம்.
கூறுவ தனிலே நேர்மை
குறைவதா? சில நாளாக
ஆறுதலில்லைப் பொல்லா
அல்லலே தருகிறாய் நீ.

வண்ணத்தை வாரி வாரி
வழங்குவாய் மலரே! இன்ப
எண்ணத்தை மனத்தில் தேக்கி
இசைக்கிறாய் கீதம் என்று

சொல்லவா கவிதை? வேண்டாம்
சொரணையே கெட்டுக் காய்த்த
புல்லுப்போற் சருகுள்ளத்திற்
போய்விட்ட துணர்ச்சி ஓட்டம்.

சுவைகமழ் உணவே! இன்பம்
சொரிகிறாய் என்று சொல்லிக்
கவிதைகள் செயவா? வேண்டாம்
கரடுதான் நெஞ்சம்; பற்றும்
பசியை நீ போக்கினாலும்
பலசுவை அறிந்து போற்றக்
கசிவில்லை என்நெஞ்சத்திற்
கவிதையே! பொறப்பா கொஞ்சம்.


உ

போன் 444 — தந்தி இரத்தினம்ஸ்

**நங்கையர்**
**நா**
**டு**
**ம்**
**நவீன நகைகள்**

உத்தரவாதமுள்ள பவுண் வைர நகைகட்கு

**இரத்தினம் ஆபரணமாளிகைக்கு**
**விஜயம் செய்யுங்கள்**

உரிமையாளர்:

க. வே. கனகரத்தினம்
50 கன்னாதிட்டி
**யாழ்ப்பாணம்.**

# அறிவு வளர்ச்சிப் போட்டி இல. 1

## சரியான விடையும் பரிசு பெற்றோர் விபரங்களும்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ | வ | னி | | ச | ரி |
| க | ரை | | | வ | |
| தீ | த | க | ங் | ள் | வ |
| | ல் | யி | து | | ச |
| தூ | | | கு | ண | ம் |
| சி | ன | ம் | | சா | பு |

எவருமே சரியான விடை அனுப்பவில்லை. இருவர் மட்டும் ஒரு பிழையுடன் விடை அனுப்பியிருந்தனர். திருவுளச் சீட்டுப்படி அவர்களுக்குப் பரிசுகள் வழங்கப்படுகின்றன.

முதலாவது பரிசு : 15 ரூபா
பெறுபவர். செல்வன் க. இரத்தின மயில்
'வேல் இன்,' அளவெட்டி தெற்கு, அளவெட்டி.

இரண்டாவது பரிசு : 10 ரூபா
பெறுபவர் : செல்வி. க. இராஜேஸ்வரி
மே/பா. திரு. வே. கணபதிப்பிள்ளை திருநெல்வேலி கிழக்கு, யாழ்ப்பாணம்.

கீழ்க்கண்ட பதினொரு பேரும் இரண்டு பிழைகளுடன் விடை அனுப்பியிருந்தனர்:

1. ந. காளிதாசன், மே/பா ,, நடராஜா, குரும்பசிட்டி. தெல்லிப்பளை. 2. செல்வி க. கமலாதேவி, கொல்லந்தோட்டம், அளவெட்டி. 3. அ. பிறைசூடி, மே/பா வே. அப்புத்துரை, கந்த ரோடை வீதி, சுன்னாகம். 4. செல்வி க., பவானி மே/பா ச. கந்தையா, 205, இராமலிங்கம் வீதி, திருநெல்வேலி கிழக்கு, யாழ்ப்பாணம். 5. S. சுப்பிரமணியம், மே/பா A. கந்தையா இணுவில் மேற்கு, சுன்னாகம். 6. செல்வி T. செல்வமணி, நவாலி தெற்கு, மானிப்பாய். 7. செல்வி S. மணிமொழி 86, பருத்தித்துறை வீதி,

நல்லூர்ச் சந்தை, யாழ்ப்பாணம். 8. செல்வி இ. சரஸ்வதி, பெண்கள் கிருஷிக பாடசாலை, திருநெல்வேலி. 9. செல்வி. நவமலர் பாக்கியநாயகம், 9, அருணகிரி வீதி, மட்டக்களப்பு. 10. செல்வி ப. கணபதிப்பிள்ளை, கலாசாலை வீதி திருநெல்வேலி வடக்கு, யாழ்ப்பாணம் 11. செல்வி றெஜீனா ஆசீர்வாதம், 29, கண்டி வீதி, யாழ்ப்பாணம்.

**விளக்கம்:** இடமிருந்து வலம்: 3-வது : எதையும் இப்படிச் சொல்வது கூடாது -- சரி, சதி, சனி, சளி. எதையும் ஆராயாமல் 'சரி' என்று சொல்பவர் பலர். சதி, சனி முதலியவை ஒரு குறிக்கப்பட்ட சந்தர்ப்பங்களில்தான் பாவிக்கப்படும். ஆகவே 'சரி' என்பதுதான் சரி.

மே--கீ : 7-வது : கீழிருந்து மேலாக வாசித்தால் வீடுகளிலுள்ள இதைக் காணலாம் -- பந்து, குந்து. எல்லா வீடுகளிலும் பந்து இருக்காது. குந்து இருக்குமல்லவா?

மே--கீ : 10 வது : இதற்குப் பயப்படுபவர்களும் உண்டு--பசி பாசி, வாசி, தூசி, நிசி, ஊசி. 'தூசி'யை அற்ப விஷயமாகக் கருதி அதைப்பற்றி அக்கறை எடுக்காதவர்கள் பலருளர். அதற்குப் பயப்படுபவர்களும் உண்டல்லவா?

# அறிவு வளர்ச்சிப் போட்டி: இல. 2.

**முதற்பரிசு: ரூபா 15.——இரண்டாவது பரிசு ரூபா 10.**
**பிரவேசக் கட்டணம் இல்லை.**


1. போட்டிக் கூப்பனும் குறிப்புகளும் அடுத்த பக்கத்தில் கொடுக்கப்பட்டுள்ளன. ' கலைச்செல்வி 'யிலிருந்து வெட்டி எடுக்கப்பட்ட கூப்பன்களில் விடைகளை மையினல் தெளிவாக எழுதி அனுப்ப வேண்டும்.
2. போட்டி ஆசிரியரின் எழுத்துக் கெழுத்து சரியான விடை அனுப்புபவருக்கு முதலாவது பரிசும், அடுத்து ஆகக் குறைந்த பிழைகளுடன் அனுப்புபவருக்கு இரண்டாவது பரிசும் அளிக்கப்படும்.
3. ஒன்றுக்கு மேற்பட்டோர் சரியானவிடை அனுப்பியிருப்பின் திருவுளச் சீட்டுப்படி பரிசுகள் அளிக்கப்படும்.
4. யாருமே சரியானவிடை அனுப்பாதிருந்தால், ஆகக் குறைந்த பிழைகளுடன் அனுப்பியோருக்குப் பரிசுகள் கொடுக்கப்படும்.

5. கலைச்செல்வி அலுவலகம், கலாதேவி அச்சகம் ஆகியவற்றைச் சேர்ந்த எவரும் இப்போட்டியில் பங்குபெற அனுமதிக்கப்படார்.

6. போட்டியின் முடிவு திகதி : 20-6-60.

7. ஏதாவது சிக்கல்கள் ஏற்படின் போட்டி ஆசிரியரின் தீர்ப்பே முடிவானது.

8. விடைகள் அனுப்பவேண்டிய முகவரி: அறிவு வளர்ச்சிப் போட்டி : 2. ''கலைச் செல்வி'' கந்தரோடை, சுன்னுகம்.



## குறிப்புகள்

### இடமிருந்துவலம்.

1. ஓர் இராகத்தின் பெயர்.
5. மன்மதனின் மனைவி.
6. இராமாயணத்தில் வாலியின் இது பிரச்சினைக்குரியது.
8. சிலரைக் காணும்போது நம் இத ஏற்படும் உணர்ச்சி
9. இந்த நூற்றாண்டில் இங்குசெல்ல முயல்பவர்கள் பலர்.
10. ஒருவகை மரம்.
12. இரவு என்றதும் நம் நினைவில் வருவது.

### மேலிருந்துகீழ்.

1. தவம் என்றால் இதை நினைத்துக் கொள்வோம்.
2. பிரதமரின் மரணத்திற்கு இது தான் காரணம் என்று சொல்லப்படுகிறது.
3. பாய்கின்ற அடி என்பது இதன் பொருள்.
4. இதற்காகவும் சிலர் சண்டை செய்வார்கள்.
7. தவறு என்பதை இப்படியும் சொல்லலாம்.
8. "... பிறகென்பதும் இல்லையென்பதற் கடையாளம்"
9. வட மொழியில் இராமாயணம் பாடியவரின் கால் எங்கே?
11. பலர் இதை விரும்பமாட்டார்கள்,

# அடுத்த இதழில்

ஈழத்தில் பத்திரிகை வளர்ச்சி பற்றி

## "மன்று கிழார்"

எழுதுகின்றார்

## "இடதுசாரிகள்"

எழுதுபவர்: அநுசூயா

---

## கலைச்செல்வி மகளிர் மலர்

ஆவணியில் வெளியாகின்றது.

புதுமைப்பிரியை
உமா
யாழ்நங்கை
பவானி

முதலிய பலர் எழுதுகின்றனர்
உங்கள் பிரதிக்கு இன்றே
பதிவு செய்து கொள்ளுங்கள்.

# "போட்டோ"கலை உலகில்

## ஓர் அற்புதம்

என்றும் மறக்கமுடியாத வைபவங்களில்,

**உங்கள் உருவங்களை**

**இயற்கை வர்ணங்களில்**

உருவாக்கித்தருகிறோம்

வடமாகாணத்தில்

சுன்னாகம் **பிறின்ஸ்** ஸ்தாபனத்தாரால்

மட்டுமே இந்தக்கலை உருவாக்கப்படுகிறது

# Kodak - Extachrome

## கொடாக்-எக்ராகுரோம்

## டெக்னிக் கலர் !!!

நினைவிருக்கட்டும்

**சுன்னாகம் பிறின்ஸ்**


யாழ்-தமிழ் இலக்கிய மன்றத்திற்காக, சுன்னாகம், கலாதேவி அச்

Registered at the G. P. O. as a News paper KALAICHELVI



Sellams